இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 81 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 13 – திங்கள்கிழமை 30 அக்டோபர் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 81: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 13 - Monday 30 October 2023 - Trichy ★★16 Pages ₹5.00

## பசும்பொன்னில்

# தேவர் திருமகனார் நினைவாக 2 மண்டபங்கள்!

## தேவர் ஜெயந்தியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தன்னை சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1500 புத்தகங்களை தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு நேற்று முன்தினம் (28.10.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நன்கொடையாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத் தலைவர் ஆர்.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக்.30- இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் இரு நுழைவாயில்களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன்கருதி 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அறிவிப்பு வருமாறு:-

தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று வீர முழக்கம் இட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் என்கிற சிற்றூரில் மிகுந்த வசதி படைத்த ஜமீன் குடும்பத்தில், 1908ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் பிறந்தார். பள்ளிப்படிப்பினை மட்டுமே முடித்திருந்தாலும், அன்னிய நாட்டினால் அடிமைப்பட்டிருந்த அடித்தள மக்களின் அன்றாட வாழ்க்கையே போராட்டமாக இருந்ததைக் கண்ணுற்ற தேவர் பெருமகனார், அம்மக்களின் வாழ்வு மேம்பட தன்னையே அர்ப்பணித்தார்.

ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராட, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்திற்கு தமிழகத்தில் இருந்து பெரும் படையினைத் திரட்டி அனுப்பிய பெருமை தேவர் பெருமகனார் அவர்களையேச் சாரும். 1920ஆம் ஆண்டு அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் அமலில் இருந்த மிகவும் கொடுமையான குற்றப்பரம்பரை என்கிற சட்டத்திற்கு எதிராக முதன் முதலில் போராடி அச்சட்டத்தினை அகற்றியவர் தேவர் பெருமகனார் ஆவார்.

1939ஆம் ஆண்டு ஜுன் 22, அகில இந்திய பார்வர்டு கட்சியை நிறுவி நேதாஜி சுபாஷ் சந்திர போஸுடன் இணைந்து செயல்பட்டல், 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் அருப்புக்கோட்டை பாராளுமன்ற தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி என பல்வேறு உச்சங்களைத் தொட்டவர் தேவர் பெருமகனார். 'வங்கத்தில் நேதாஜி; தமிழகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்' எனத் தலைவர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவர்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளை கொண்ட விடுதலை போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாள் தேவர் ஜெயந்தி விழாவாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் அக்டோபர் 30 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகின்றனர். நினை விடத்தின் முன் ஒரு சிறிய இடத்தில், குறுகிய நேரத்தில் அதிக கூட்டம் கூடுவதால் பொதுமக்கள் நீண்ட நேரம் திறந்த வெளியில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. வெயில் மற்றும் மழையில் இருந்து அவர்களைப் பாதுகாத்திடவும், கூட்ட நெரிசலை தடுப்பதற்கும் தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் விழாவின் போது நினைவிடத்தின் முன் தற்காலிக கொட்டகை - பந்தல் மற்றும் தடுப்பு அமைக்கப்பட்டு வருகிறது.

தேவர் ஜெயந்தி விழாவின்போது, கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாத்திட, ஒரு நிரந்தர மண்டபம் அமைத்து தர வலியுறுத்தி அரசுக்கு பொதுமக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை அளித்து வருகின்றனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் இரு நுழைவாயில்களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன்கருதி 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!**

தேவர் ஜெயந்தியை முன்னிட்டு பசும்பொன்னில் உள்ள தேவர் திருமகனார் நினைவிடத்தில் நேரில் அஞ்சலி செலுத்துவதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று (30.10.2023) பயணம் மேற்கொள்கிறார்.

## கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்!

# மாலத்தீவிலிருந்து மீனவர்களை உடனே மீட்டெடுத்திடுக!

## வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக். 30 - மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள் மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் 23.10.2023 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விரைவில் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் மீன் இறங்குதளத்திலிருந்து, 1.10.2023 அன்று, INDTN12MM6376 பதிவு எண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள், 23.10.2023 அன்று தினாது தீவு அருகே மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம், மாலத்தீவு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்டுள்ள 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

## மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க.வுக்கு கடும் எதிர்ப்பு!

# பிரதமர் மோடியின் தேர்தல் பிரச்சாரம் திடீர் ரத்து!

*ஐஸ்வால், அக். 30 - மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க.,வுக்கு பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு நிலவுவதால் பிரதமர் மோடியின் தேர்தல் பிரச்சாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.*

*மக்கள் விரோத செயல்பாடுகள் காரணமாக ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு நிலவி வருகிறது. இது, ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும் என அரசியல் கட்சிகள் தெரிவித்து வருகின்றன. கருத்துக்கணிப்பு முடிவுகளும் பா.ஜ.க.,வுக்கு எதிராகவே அமைந்துள்ளன.*

*இந்நிலையில், மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க., மீது பொதுமக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். மிசோரமில் மிசோ தேசிய முன்னணி கட்சி பா.ஜ.க.,வுன் இணைந்து கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. கூட்டணி ஆட்சியில் மாநிலத்தில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என குற்றச் சாட்டு எழுந்துள்ளது. இதனால் இரு கட்சிகள் மீதும் கடும் அதிருப்தி நிலவுகிறது. கூட்டணி யிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. பா.ஜ.க.,வின் பிரச்சாரத்தில் கலந்து கொள்ள போவதில்லை என கூட்டணி கட்சிகள் அறிவித்துள்ளன.*

*இதன் காரணமாக தனது மிசோரம் தேர்தல் பிரச்சாரத்தை பிரதமர் மோடி ரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மிசோரம் மாநிலத்தில் அடுத்த மாதம் 7 ஆம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுகிறது. அங்கு வரும் 30 ஆம் தேதி பிரதமர் பிரச்சாரத்துக்கு செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.*

## 'வந்தே பாரத்' ரயில்களை தயாரிக்க பன்னாட்டு நிறுவனத்துக்கு ஒப்பந்தம்!

# ரூ.10 ஆயிரம் கோடி மெகா முறைகேடு!

## ஐ.சி.எப். ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!


புதுடெல்லி, அக்.30 – வந்தே பாரத் ரயில்களை தயாரிக்க பன்னாட்டு தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதில் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மெகா ஊழல் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதிய படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயிலை உருவாக்க பன்னாட்டு நிறுவனத்துடன் ரயில்வே அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு ஐ.சி.எஃப் ஊழியர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது வரை வந்தே பாரத் ரயிலை தாங்கள் தயாரித்த நிலையில், தற்போது தனியாருக்கு ஒப்பந்தம் அளித்துள்ளதாகவும், ரயில் பெட்டி தயாரிப்புக்கு ஐ.சி.எஃப்., நிறுவனம் முழுவதையும் அவர்கள் பயன்படுத்தி கொள்ளவுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

ரயில் தயாரிப்புக்கு தேவையான பொருட்கள், இடம் உள்ளிட்ட அனைத்தையும் நம்மிடமே பெற்று கொண்டு, எந்த முதலீடும் இல்லாமல் லாபம் சம்பாதிக்க உள்ளதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஒன்றிய அரசை கண்டித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.சி.எஃப்., ஊழியர்களால் 70 கோடி ரூபாயில் வந்தே பாரத் ரயில் தயாரிக்கப்படும் நிலையில், பன்னாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஒரு ரயிலுக்கு 120 கோடி ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், 200 ரயில்களை தயாரிக்க ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மொத்தம் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மெகா ஊழல் மற்றும் முறைகேடு அரங்கேறியுள்ளதாகவும் குற்றம் சாட்டு எழுந்துள்ளது.

பன்னாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை உடனே ரத்து செய்ய வேண்டும் என்றும், ஐ.சி.எஃப்., ஊழியர்களால் மட்டுமே வந்தே பாரத் ரயிலை தயாரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.





கலைஞர் 100 1924 - 2023
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின்
116ஆவது பிறந்த நாள்
மற்றும்
குரு பூஜை
நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 10.30 மணி,
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்
தமிழ்நாடு அரசின் சார்பில்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் நினைவிடத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்
நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 9.30 மணி, இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை
தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009




THANK YOU FOR OUR CM
விடியல் பயணம் என்னும் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கும்
சேவை உள்ளிட்ட தமிழக அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு
கொண்டு சேர்க்கும் மகத்தான சேவைப்பணியில் ஈடுபட்டுள்ள
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு
கடுமையான நிதிநெருக்கடியிலும் தொழிலாளர் வர்க்கத்தின் மீது அக்கறை கொண்டு
20% (இருபது சதவீதம்) போனஸ் வழங்க உத்தரவிட்ட
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் தளபதி
அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
சா.சி.சிவசங்கர் BE.,MBA.,
தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர்
மு.சண்முகம் M.P.,
தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர்
கி.நடராசன்
தொ.மு.ச. பேரவை பொருளாளர்
LPF.க.பெரியசாமி
பொதுச்செயலாளர்
CTC P.துரைசாமி
மண்டலத் தலைவர்
N.A.கணேசன்
மண்டலப் பொருளாளர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
அனைத்து தொழிலாளர்கள் கோவை மண்டலம்




நாள் : அக்டோபர் 30
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்
திருமகனார் குரு பூஜைக்கு
வருகை தரும்
மாண்புமிகு தமிழ் நாடு
முதலமைச்சர்
கழக தலைவர்
அவர்களையும்
அமைச்சர் பெருமக்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள்,
நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
கழக நிர்வாகிகள்,
அனைவரையும் வருக! வருக!
என வரவேற்கின்றேன்.
மாண்புமிகு K.R.பெரியகருப்பன் அவர்கள்
கூட்டுறவுத்துறை அமைச்சர் - மாவட்ட கழக செயலாளர்
அன்புடன் ஆ.தமிழரசி ரவிக்குமார் B.com,M.LA.,
முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் - மானாமதுரை
மாநில மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர்.




21 ஆண்டுகள் ஆயினும் கண்ணீருடன்
நினைவஞ்சலி
தோற்றம்
22.04.1955
மறைவு
30.10.2002
திருமிகு
அமர்ஜோதி M.சுப்ரமணியம்
அவர்கள்
முன்னாள் இனாம் கரூர் பேரூராட்சி மன்ற தலைவர்
தந்தையாய் குருவாய் தெய்வமாய்
வணங்கும்
M.S.பாலாஜி
கரூர் மாவட்ட திமுக

## தொழில் முகமாகத் திகழ்கிறது டி.வி.எஸ். நிறுவனம் – உகந்த சூழ்நிலை காரணமாக

# தமிழ்நாடு தொழில் துறையில் வேகமாக முன்னேறி வருகிறது!

## டி.எஸ்.சீனிவாசன் நூற்றாண்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, அக்.29 -

**தமிழ்நாட்டின் தொழில் முகமாக டி.வி.எஸ். நிறுவனம் திகழ்கிறது என்றும், உகந்த சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் தொழில் துறையில் தமிழ்நாடு அதி வேகமாக முன்னேறி வருகிறது என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டி.எஸ்.சீனிவாசன் நூற்றாண்டு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2023) சென்னையில் நடைபெற்ற டிவிஎஸ் குழுமத்தின் டி.எஸ். சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :

TVS என்ற மூன்றெழுத்து நிறுவனத்தை DMK என்ற மூன்றெழுத்தின் தலைவராக வாழ்த்துவதற்காக நான் வந்திருக்கிறேன்!

எனது தந்தை என்பதைவிட நான் தலைவராக போற்றக்கூடிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இதுதான் நூற்றாண்டு. வேணு சீனிவாசன் அவர்களுடைய தந்தை டி.வி.எஸ். குழுமங்களின் முக்கியத் தூணாக விளங்கிய மரியாதைக்குரிய சீனிவாசன் அவர்களுக்கும் இதுதான் நூற்றாண்டு. தமிழ்நாட்டின் தொழில்துறை அடையாளங்களில் TVS முக்கியமானது என்பதை யாரும் மறக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது.

TVS நிறுவனத்தை பற்றி நான் உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டினுடைய தொழில் முகத்தை காட்ட வேண்டும் என்றால் அதற்கு ஒரு முகமாக – டி.வி.எஸ். நிறுவனத்தைக் காட்டலாம். இதற்கு அடித்தளம் அமைத்தவர் தொழில் மேதைகளில் ஒருவரான டி.வி.சுந்தரம் அவர்கள்.

### திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம்!

இன்றைக்கு லட்சக்கணக்கான இரு சக்கர வாகனங்கள் எத்தனை வந்தாலும் ஏழைகளுக்கான வாகனமாக இருந்தது TVS 50 வாகனம் தான். ஏழை எளிய சிறு வியாபாரிகளின் வாழ்க்கையில் விளக்கேற்றிய ஒளிவிளக்கு அந்த வாகனம். தென் மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களுக்குள் முதலில் சென்ற வாகனம் TVS தான். இதை உருவாக்கியவர் திருக்குறுங்குடி வெங்கராம் சுந்தரம் அவர்கள். டி.வி.சுந்தரம் குரூப்ஸ் நிறுவனங்களை உருவாக்கிய தொழில்துறை மேதை அவர். வழக்கறிஞராக இருந்து தொழிலதிபர் ஆனவர் அவர். அந்தக் காலத்தில் திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம் என்பது மிகப்பெரிய அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் சொற்பொழிவாற்றும் இடமாக இருந்தது. இப்போதும் இந்த அமைப்பு நூலகத்துடன் இயங்கி கொண்டு வருகிறது.

அந்த திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கத்தில் உரையாற்ற வந்த வழக்கறிஞர் நார்டன் அவர்களது உரையைக் கேட்டு தொழில் துறையில் இறங்கினார் டி.வி.சுந்தரம் அவர்கள். 1912ஆம் ஆண்டு மதுரையை மையமாக கொண்டு பேருந்து சேவையை தொடங்கினார். தஞ்சாவூர் புதுக்கோட்டை தான் அவர் முதன்முதலாக பேருந்து இயக்கிய வழித்தடம். அந்தக் காலத்தில் சரியான சாலை வசதிகள் இல்லை. அதனால் சாலைகள் போடுகிற ஒப்பந்தத்தையும் எடுத்தார். சாலைகளில் இரும்பு ஆணிகள், மாட்டு லாடம் அதிகம் கிடக்கும். இதனால் பேருந்து டயர் பஞ்சர் ஆகும். எனவே இதை முன்கூட்டியே எடுக்க காந்த வாகனத்தையும் வைத்திருந்தார்.

இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்தில் பெட்ரோல் தட்டுப்பாடு வந்தது. உடனே கரி வாயு மூலம் வாகனத்தை இயக்குகிற பங்க் வைத்தார். பேருந்து இயக்குவது பாகங்களை தயாரிப்பது வாகனங்களை உருவாக்குவது போன்ற கிளைத் தொழில்கள் எல்லாவற்றையும் தொடங்கியதால்தான், இன்றைக்கு 80 நாடுகளில் டி.வி.எஸ் நிறுவனம் செயல்பட்டு கொண்டு இருக்கிறது.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2023) சென்னையில் நடைபெற்ற டிவிஎஸ் குழுமத்தின் டி.எஸ். சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவில், அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., டிவிஎஸ் குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், மாநில திட்டக்குழு உறுப்பினர் மல்லிகா சீனிவாசன், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், பாரதிய வித்யா பவன் தலைவர் கிருஷ்ணராஜ் வானவராயர், செயல் இயக்குநர் லட்சுமணன், தொழிற்சங்க தலைவர் குப்புசாமி மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இத்தகைய மாபெரும் மனிதர், தன்னுடைய வாரிசுகள் எல்லோரையும் தொழில் துறையில் ஈடுபடுத்தி வளர்த்திருக்கிறார். தாத்தா மகன் பேரன் – கொள்ளுப்பேரன் என்று டி.வி.எஸ்ன்ற மூன்றெழுத்தை காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

### தொழிலில் புதுமை!

டி.வி.சுந்தரம் அவர்களை போலவே அவருடைய மகன் சீனிவாசனும் இந்த தொழிலில் புதுமைகளை புகுத்தி விரிவுபடுத்தினார். சீனிவாசன் அவர்களின் மகன் வேணு சீனிவாசன் அவர்களும் இதை இன்னும் சிறப்பாக செய்துகொண்டு வருகிறார்.

வாரிசுகள் திறமைசாலிகளாக இருந்தால் எதையும் காப்பாற்றலாம். அதற்கு அடையாளமாக டி.வி.எஸ் நிறுவனம் உயர்ந்து நிற்கிறது. வாரிசு என்று சொல்வதால் ஏதோ அரசியல் பேசுவதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. வாரிசுகள் திறமைசாலிகளாக இருந்தால் எதையும் சிறப்பாக செய்து வெற்றிக் கொடி நாட்டலாம் என்றுதான் சொன்னேன்.

இன்றைக்கு நாம் நூற்றாண்டு விழாவை கொண்டாடி வரக் கூடிய சீனிவாசன் அவர்கள், இந்த டி.வி.எஸ் நிறுவனத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்றதில் முக்கியப் பங்காற்றியவர். தொழிலதிபர்களில் பலவகை உண்டு. சிலருக்கு நிர்வாகத் திறன் இருக்கும். சிலருக்கு தொழில் நுட்ப அறிவு அதிகமாக இருக்கும். சிலர் நேர காலம் பார்க்காமல் உழைப்பார்கள். சிலர் புதுமைகளை புகுத்துவார்கள். சிலர் தொழிலாளர்களே முக்கியம் என்று நினைப்பார்கள். இவை அனைத்தையும் ஒரு சேரப் பெற்றவராக டி.எஸ்.சீனிவாசன் அவர்கள் இருந்தார். இதுதான் அவருடைய சிறப்பு. வெற்றிக்கும் காரணம்.

தனது தந்தை நிர்மாணித்துக் கொடுத்த தொழிலை அப்படியே காப்பாற்றுபவராக மட்டும் இல்லாமல் அதை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செலுத்துபவராவும் டி.எஸ்.சீனிவாசன் அவர்கள் இருந்தார். அப்பாவினுடைய நிறுவனமாக இருந்தாலும் அவர் இதில் முதன் முதலாக சர்வீஸ் மேனேஜர் என்ற பொறுப்பில்தான் சேர்ந்தார். வாழ்க்கையின் இறுதி வரைக்கும் சர்வீஸ் முதலாளியாக செயல்பட்டிருக்கிறார் டி.எஸ். சீனிவாசன் அவர்கள்.

ஒரு இயந்திரத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்கான கையேட்டை அவர் தயாரித்தாகவும் – அதை ஒருவர் படித்தாலே சிறந்த தொழிலதிபர் ஆகிடலாம் என்றும் படித்தபோது ஆச்சரியமாக இருந்தது. ஏன் இதை சொல்கிறேன் என்றால் எல்லோரும் தங்களுக்குத் தெரிந்த தொழில் ரகசியத்தை வெளியில் சொல்லி விடமாட்டார்கள். ஆனால், எல்லோருக்கும் கற்பிக்கக் கூடியவராக டி.எஸ். சீனிவாசன் அவர்கள் இருந்திருக்கார்.

சேவைத் துறை நிறுவனமாக இருந்த டி.வி.எஸ். நிறுவனத்தை உற்பத்தித் துறை நிறுவனமாக மாற்றியதில் பெரும்பங்கு டி.எஸ். சீனிவாசன் அவர்களை சேரும். சென்னை பாடி பகுதியில், 300 ஏக்கர் நிலத்தை வாங்கியபோது, இவ்வளவு பெரிய நிலம் எதற்கு என்று அப்போது சிலர் தடுத்திருக்கிறார்கள். ஆனால், 25 ஆண்டுகள் கழித்து தேவைப்படும் என்று தொலைநோக்குப் பார்வையோடு சொல்லி இருக்கிறார் டி.எஸ்.சீனிவாசன் அவர்கள்.

சைக்கிள் போல ஒவ்வொரு வீட்டிலும் மொபெட் இருக்க வேண்டும் என்று சொல்லி – அதை சாதித்துக் காட்டியவர் அவர்தான். உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையிலேயும் ஓசூர் தொழிற்சாலையை உருவாக்க கடுமையாக உழைத்தார். துணிச்சலாக ரிஸ்க் எடுக்கக் கூடியவர்.

தொழிலாளர்களோடு தொழிலாளராக இருந்திருக்கார். அவர்களின் நலனில் அக்கறை கொண்டவராக இருந்திருக்கார். இந்த சிந்தனை என்பது மரியாதைக்குரிய டி.வி.சுந்தரம் அவர்கள் மூலமாக வந்த சிந்தனை. காந்தியவாதியாக வாழ்ந்தவர் டி.வி.சுந்தரம் அவர்கள். முற்போக்கு எண்ணம் கொண்டவராக இருந்தார். இளம் வயதில் கணவரை இழந்த தன்னுடைய மகளுக்கு அந்தக் காலத்திலேயே மறுமணம் செய்து வைத்தார். தலைசிறந்த மருத்துவராக சட்டமன்ற உறுப்பினராக பிரதமர் நேரு அவர்களின் அமைச்சரவையில் ஒன்றிய துணை அமைச்சராவும் தி.சு.சௌந்திரம் அவர்கள் உயர்ந்தார்.

இப்போதும் சிலர் குழந்தை திருமணத்தை பச்சையாக ஆதரித்தும் மறுமணம் செய்வதாக இருந்தால் அதற்கு மந்திரம் கிடையாது என்றும் சொல்கிற காலத்திலே 60 ஆண்டுகளுக்கு முன்னரே முற்போக்காக சிந்தித்தவர் டி.வி.சுந்தரம் அவர்கள்.

இங்கே ஒரு புத்தகம் டி.வி.எஸ் சார்பில் வெளியிடப்பட்டு இருக்கிறது. டி.வி.எஸ் செய்த சாதனைகளில் இதுவரை வெளியில் தெரியாத ஒரு சாதனை இது. தொழில் உற்பத்தி மற்றும் பெருக்கத்தின் வழி, வருமானத்தையும் வளர்ச்சியையும் மட்டும் பெருக்காமல், ஒரு படி மேல போய், பல்லுயிரின் இருப்புக்கும் பெருக்கத்துக்குமே தொழில்துறை பயன்பட முடியும் என்று TVS நிறுவனம் காட்டியிருக்கிறது. அதுதான் இந்த புத்தகம்.

### 2500 கிராமங்கள் தத்தெடுப்பு!

தமிழ்நாட்டின் தொழில்நகரமான ஓசூரில் TVS இந்த உதாரணத்தை தொடங்கியிருக்கிறது. அங்கே நிறுவனம் இயங்கத் தொடங்கிய 1976கால கட்டத்தில் ஒரு குளத்தை உருவாக்கி இருக்கிறார்கள். பறவைகள் வந்திருக்கிறது. நீர்நிலைகளில் மட்டுமே வசிக்கிற Painted Stork எனப்படும் நாரைகளும் வரத் தொடங்கி இருக்கிறது. தொழிலைப் பெருக்க வந்தவர்கள், பல்லுயிர் பெருக மரங்களை நட்டிருக்கிறார்கள். இருபது ஆண்டுகளில் ஓசூரில் ஒரு காட்டையே TVS உருவாக்கியிருக்கிறார்கள். அதை The Painted Stork என்கிற இந்த புத்தகத்தில் ஆவணப்படுத்தி இருக்கிறார்கள்.

SST அறக்கட்டளை மூலமாக 2500க்கும் மேற்பட்ட கிராமங்களை தத்தெடுத்து அந்தக் கிராமங்களை மேம்படுத்தி கொண்டு வருகிறார் வேணு சீனிவாசன் அவர்கள்.

* பெண்கள் குழந்தைகள் வளர்ச்சி
* நீர் பாதுகாப்பு
* வேளாண்மை
* கால்நடை வளர்ச்சி

சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பணிகளை நீங்கள் செய்து கொண்டு வருகிறீர்கள்.

இதே போன்ற அறக்கட்டளைகளை நிறுவி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழில் நிறுவனங்களும் கிராமப்புற மேம்பாட்டுக்கு பங்களிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

'நம்ம ஊர் பள்ளி' என்கிற மகத்தான திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். சமூக சேவை எண்ணம் கொண்டவர்களுடைய முயற்சியையும் இணைத்துக் கொண்டு அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தான் இந்த திட்டத்தின் நோக்கம். இதன் மூலமாக, தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்த வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். நம்முடைய வேணு சீனிவாசன் அவர்களும், செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாத் ஆனந்த் அவர்களும் இந்த தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். திட்டத்தை நான் தொடங்கிய முதல் நாளே ஐம்பது கோடி ரூபாய் மதிப்பிலும், இப்போது 158 கோடி ரூபாய் மதிப்பிலும் கொடைகள் வந்திருக்கிறது.

### இயற்கை பேரிடர் காலங்களில் உதவி!

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் வெளியில் இருந்து கிடைத்த முதல் பாராட்டு திரு. வேணு சீனிவாசன் அவர்களுடைய பாராட்டு தான். அதை அவர் மறந்திருந்தாலும் நான் மறக்கவில்லை.

இயற்கைப் பேரிடர் காலங்களில் உதவி செய்கின்ற நிறுவனமாக டி.வி.எஸ். இயங்கி வருகிறது. கொரோனா காலத்திலும் நிறைய உதவிகள் செய்திருக்கிறீர்கள். சீனிவாசன் சர்வீஸ் டிரஸ்ட் என்ற பொருத்தமான பெயரை வைத்திருக்கிறீர்கள். அவரே சர்வீஸின் அடையாளமாக இருக்கிறார்.

டி.எஸ். சீனிவாசன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் அவரது தொழில் முயற்சிகளை அவரது சமூக நோக்கங்களை அப்படியே பின்பற்றி வரும் அருமை நண்பர் வேணு சீனிவாசன் அவர்களை மனதார பாராட்டுகிறேன். நூற்றாண்டு விழா நாயகர் சீனிவாசன் புகழ் வாழ்க வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு அனைத்துத் துறையிலும் முன்னேறி வருகிறது. அதிலும் குறிப்பாக, தொழில் துறையில் அதிவேக முன்னேற்றத்தை கண்டு வருகிறது. ஏராளமான புதிய புதிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். தமிழ்நாடு அமைதி மிகு மாநிலமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஏறத்தாழ 10 விழுக்காடு அளவுக்குத் தமிழ்நாட்டின் பங்களிப்பு இருக்கிறது.

2024 ஜனவரி மாதம் நாங்கள் நடத்த இருக்கிற உலக முதலீட்டாளர்கள் மாநாடு இது வரை இப்படி எங்கேயும் நடந்ததில்லை என்று புகழப்படுகிற அளவிற்கு நடத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். டி.வி.எஸ். போன்ற நிறுவனங்கள் இதில் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரை, அரசுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்பட்டு வளர்ச்சியை அடைய வேண்டும். டி.வி.எஸ் போன்ற புதிய புதிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும். நூற்றாண்டு விழா நாயகர் சீனிவாசனைப் போன்ற தொழில் மேதைகள் உருவாக வேண்டும். வேணு சீனிவாசன் போன்ற தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டுக்குத் தேவை. அதற்கு இது போன்ற விழாக்கள் ஊக்கமளிப்பதாக அமையும் என்பதைச் சொல்லி இந்த அளவில் நான் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தி.மு.க. அயலக அணி மலேசிய அமைப்பாளரும், சமூக சேவகருமான ஃபிர்தவ்ஸ் கானுக்கு மலேசியாவிலிருந்து வெளிவரும் 'நம்பிக்கை' என்கிற நாளேடு இந்தாண்டு சிறந்த சமூக சேவகருக்கான விருதினை வழங்கி கவுரவித்துள்ளது. விழாவில் டத்தோ வீரா ஷாஹுல் ஹமீத், பத்திரிகையின் நிறுவனப் டத்தோ ஸ்ரீ இக்பால், ஜெய்லானி, காசிம், கஜ்ஜாலி, ஜெகன், ரஃபிக், அப்துல்காதர், ஃபிர்தவ்ஸ் , அஜின்ஷா உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

# தி.மு.க. அயலக அணி மலேசிய அமைப்பாளருக்கு 'நம்பிக்கை' விருது!

கோலாலம்பூர், அக். 30 -

மலேசியாவில் இருந்து வெளி வரும் 'நம்பிக்கை' என்கிற தமிழ் நாளேடு வருடாவருடம் தமிழர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளது.

இந்த வருடம், சமூக சேவைக்கான விருது தி.மு.க. அயலக அணி மலேசிய அமைப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நல அமைப்பின் தலைவருமான ஃபிர்தவ்ஸ் கான் அவர்களுக்கு அவரின் சேவையை பாராட்டி விருது வழங்கப்பட்டது.

வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான தேவையை பூர்த்தி செய்தல், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு துணை நின்றல், தமிழர்கள் யாரேனும் இறந்து விடின், அவர்களின் உடலை பத்திரமாக தாய்நாட்டிற்கு அனுப்பி வைத்தல் போன்ற சமூக சேவைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

விழாவில், டத்தோ வீரா ஷாஹுல் ஹமீத், நம்பிக்கை பத்திரிக்கையின் நிறுவனர் டத்தோ ஸ்ரீ இக்பால், மற்றும் NRTIA மலேசிய நிர்வாகிகள் ஜெய்லானி, காசிம், கஜ்ஜாலி, ஜெகன், ரஃபிக், அப்துல் காதர், ஃபிர்தவ்ஸ், அஜின் ஷா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

கருப்புசிகப்பு உடை அணிந்து விருதை பெற்றுக்கொண்டது மேலும் சிறப்பாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட சிறுபான்மை அணி சார்பில் விழுப்புரம் நாப்பாளய தெருவில் உள்ள புனித சேவியர் ஆலயத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு வேண்டி கையெழுத்து பெரும் நிகழ்ச்சி உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் டி. என். ஏ.தமின், துணைத் தலைவர் தோமினிக், துணை அமைப்பாளர்கள் எஸ். கே. எஸ். முகமது அலி , லீனா, நகர நிர்வாகிகள் ஜெ. ஜெ. அப்பு, லால், அமீர் ஸ்கொயில், அபு தாகீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச் செல்வி பிரபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ. தினகரன், மாணவர் அணி அமைப்பாளர் ஸ்ரீ வினோத், துணை அமைப்பாளர் லெனின் விஜய், ஆதிதிராவிடர் நலக் குழு செல்வ பிரேம், மகளிர் அணி பிரான்சிஸ்கா மேரி , தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு, குரு இராமலிங்கம், வார்டு கழக நிர்வாகிகள் ஜோதி குமார், சசி, தண்டபாணி, லெனின் அண்டரகோ, இரத்தினம், முருகன், அசன், ஜான் பிரிட்டோ, ஜெரால்டு, ராஜ்குமார், சூசை, ராயர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஏழை பெண் தொழிலாளர்களை சுரண்டிக் கொண்டிருக்கும் ஹைடிசைன் நிர்வாகத்தை கண்டித்து புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. இதில் 100க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

### கல்விதான் ஒரு மனிதனை எல்லா துறைகளிலும் உயர்ந்த முடியும் என்று உணர்ந்து

# கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## மரக்காணம் ஒன்றியத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

மரக்காணம், அக். 30 -

விழுப்புரம் மாவட்டம் பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் மரக்காணம் ஒன்றியம் கூனிமேடு, அனுமந்தை, பிரம்மதேசம், ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு விழா நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள்கஸ்தூரி ஜெயராமன்,மகேஸ்வரி எத்திராஜ் ஒன்றிய கவுன்சிலர்கள் விஜயா பெருமாள், தேசாம் பாலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர்கள் ரத்தினசாமி, கலைச்செல்வி,திருமால் ஆகியோர் அனைவரும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கூனிமேடுஅரசு மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 63 லட்சத்தி 54 ஆயிரம் மதிப்பீட்டில் மூன்று கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கும், அனுமந்தை அரசு மேல்நிலைப் பள்ளியில் 1 கோடியே 89 லட்சத்தி 50 ஆயிரம் மதிப்பீட்டில் 10 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கும், பிரம்மதேசம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 63 லட்சத்தி 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு என மொத்தம் 3 கோடியே 16 லட்சத்து 58 ஆயிரம் மதிப்பீட்டில் 16 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு செய்து பணிகளை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பிரம்ம தேசம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டஅங்கன்வாடி மையத்தினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு சால்வைஅணிவித்து அவர்களை கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் :

கல்விதான் ஒரு மனிதனை எல்லாத் துறை களிலும் உயர்த்த முடியும் என்று தாய் உள்ளத்துடன் உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் இந்த ஒரே ஆண்டில்ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தரிட்டுள்ளார்.

கல்வி மீது அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம்,

ஏழைப் பெண்களை உயர் கல்வி படிப்பதற்கு புது பெண் திட்டத்தை தொடங்கி வைத்து மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கி பாரதி கண்ட கனவை நிறைவேற்றி இன்றுமுதலமைச்சர் பாரதியாக வாழ்ந்து கொண்டிருப்பதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெரிமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பருதி,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,ஒன்றிய துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,மாவட்ட துணை சேர்மன் ஷீலா தேவி சேரன்,உதவி செயற்பொறியாளர் ராஜவேலு,மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ்,ஒன்றிய கவுன்சிலர்கள் அர்ஜுனன், கண்ணன், வேலாயுதம், விநாயகம், நாகஜோதி கணேஷ், சபரி முனுசாமி, துர்கா தேவி கலைஞர்,ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெகதீஸ்வரி,நிர்வாகிகள்தியாகராஜன்,சாந்தமூர்த்தி, ராஜதுரை, சந்திரசேகர் ,வெற்றிவேல், பொதுக்குழு பாலகிருஷ்ணன், அனுமந்தை நாராயணதுரைக்கண்ணு,துணைத் தலைவர் கலியமூர்த்தி,கருணாகரன், கஜேந்திரன், ரவிச்சந்திரன், செல்வம், தினேஷ்குமார், மாவட்ட பிரதிநிதி வடிவேல், மரக்காணம் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் கார்த்திகேயன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகக் கூட்டரங்கில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில். மாவட்ட அளவிலான கலைத் திருவிழாவினை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சியர் திருமதி ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்ற துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பெ) மு.சிவக்குமார் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

# கொள்ளிடம், குத்தாலம் ஒன்றியத்தில் ரூபாய் 1 கோடியே 71 லட்சம் மதிப்பிலான 8 கட்டிடங்கள்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - செ.இராமலிங்கம் எம்.பி. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாகை, அக். 30 -

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியத்தில் புத்தூர் ஊராட்சியில் ரூ. 22.60 லட்சத்தில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், எருக்கூர் ஊராட்சியில் ரூ. 42.65 லட்சத்தில் கட்டப்பட்ட கிராம செயலக கட்டிடம், மாதானம் ஊராட்சியில் ரூ.11.97 லட்சத்தில் கட்டப் பட்ட அங்கன்வாடி மைய கட்டிடம், குத்தாலம் ஒன்றியம் கிளியனூர் மற்றும் பண்டாரவாடை ஊராட்சியில் தலா ரூ.11.97 லட்சத்தில் கட்டப் பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடத்தையும், மேக்கிரிமங்களம் ஊராட்சியில் ரூ. 10.93 மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடத்தையும், திருமணஞ்சேரி ஊராட்சி ரூ.41.03 லட்சத்தில் கட்டப்பட்ட புதிய கிராம சந்தை கட்டிடத்தையும், பொரும்பூர் ஊராட்சியில் ரூ. 14 லட்சத்தில் கட்டப்பட்ட உணவு தானியக் கிடங்கு கட்டடிடம் ஆகிய கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி, மகாபாரதி தலைமைத் தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் , மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொள்ளிடம், குத்தாலம் ஒன்றியத்தில் ரூபாய் 1கோடியே 71 லட்சம் மதிப்பிலான 8 கட்டிடங்களை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன் திறந்து வைத்தார். நிகழ்ச்சிகளில் மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன், மாவட்டக் கழக பொருளாளர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், பி.கென்னடி,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், அமுர்த.விஜயகுமார், செல்லசேதுரவிகுமார், மலர்விழிதிருமாவளவன், பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், கு.வைத்தய நாதன், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் அன்புச்செழியன், அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, நந்தினிஸ்ரீதர், ஜெயபிரகாஷ், மகேந்திரன், கமலஜோதி தேவேந்திரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, ராஜ்குமார், முத்து.குபேந்திரன், லதா உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் நெசவாளர் அணி கிழக்கு மண்டல ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி - முனைவர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பு!

திருவாரூர், அக். 30 -

திருவாரூரில் கழக நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல நிர்வாகிகளின் ஆலோசனைக்கூட்டம் இன்று (30.10.2023 ) நடைபெற இருக்கிறது. இந்த கூட்டத்தில் கழக துணைப்பொது செயலாளர் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., உள்ளிட்டோர் பங்கேற்க இருக்கின்றனர்.

தி.மு.க. நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல ஆலோசனை கூட்டம், திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் இன்று (30.10.2023 ) காலை 10.00 மணிக்கு நடைபெற இருக்கிறது. கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில செயலாளர் காஞ்சி தி.அன்பழகன், மாநில செயலாளர்கள் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, பரணி.கே.மணி, நெல்லை சே.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து. ரவிச்சந்திரன்,துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை ஏற்கின்றனர்.

கூட்டத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர். காந்தி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் கூட்டத்தில், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

திருவாரூர் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பி.சுதந்திரமணி ,தஞ்சை மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கூட்டத்தில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைநகர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. சுந்தரராஜன்

### அக்டோபர் 30 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பிரதிநிதி, பொருளாளர், அவைத்தலைவர் எனவும், தொடர்ந்து பகுதிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை கூட்டுறவு சங்கத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகத் தலைவர் அவர்கள், “களத்தில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றும் நல்லதொரு தளகர்த்தரை கழகம் இழந்திருக்கிறது” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னை தீனன்

### அக்டோபர் 30 (1977)



சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.

1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க, சென்னையில் நடைபெற்ற பேராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே என் நேரு , இந்திய மாணவர் சங்கம் சார்பில் நீதிமன்றம் அருகில் இருந்து அண்ணா விளையாட்டு அரங்கம் வரையிலான 5 கிலோமீட்டர் மாரத்தினை ஓட்டத்தினை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி உட்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியத்திற்குட்பட்ட மதானம் ஊராட்சியில் அங்கன்வாடி மைய புதிய கட்டடத்தை சுற்றுசூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். உடன் மயிலாடுதறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கொள்ளிடம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மலர்விழிதிருமாவளவன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கென்னடி மற்றும் பலர் உள்ளனர்.

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு



சென்னை,அக்.30-

தீபாவளி பண்டிகையை யொட்டி பொதுமக்களின் வசதிக்காக 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்து துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை யொட்டி சென்னை, கோவை, பெங்களூரு உள் ளிட்ட பல வேறு பகுதிகளில் பணி, படிப்பு நிமித்தமாக தங்கியிருப்போர், தொழில் புரி வோர் என லட்சக்கணக்கானோர் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொள்வர். அதன்படி, பயணிகளின் வசதிக்கேற்ப தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளியை ஒட்டி, சிறப்புப் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்து துறை செயலர் பணீந்திர ரெட்டி, சிறப்புச் செயலாளர் வெங்கடேஷ், ஆணையர் சண்முக சுந்தரம், காவல் துறை உயர் அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்திற்கு பிறகு இந்நாண்டுக்கான தீபாவளி சிறப்பு பேருந்துகள் இயக்கம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் படி, நவம்பர் 9ம் தேதி முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப் பட உள்ளன. அந்தவகையில், சென்னையில் இருந்து நவம்பர் 9 ம் தேதி 3,465 பேருந்துகளும், 10 ம் தேதி 3,395 பேருந்துகளும், 11ம் தேதி 3,515 பேருந்துகள் என 10,975 பேருந்துகள் இயக்கப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பிற ஊர்களுக்கு செல்ல 5,920 சிறப்பு பேருந்துகள் இயக்கப் பட உள்ளன. ஒட்டுமொத்த மாக தமிழகம் முழுவதும் 16,895 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

தீபாவளி பண்டிகை முடிந்து நவம்பர் 13 ம் தேதி முதல் 15ம் தேதி வரை 13,292 தினசரி பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகள் இயக்கப் படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சென்னையில் மட்டும் 6 முக்கிய இடங்க ளில் இருந்து ஏற்கனவே பண் டிகை காலங்களில் பேருந்து கள் இயக்கப்பட்டன. அதை ப்போல மீண்டும் அங்கிருந்து இயக்க முடிவு செய்யப்பட் டது. அவை, கோயம்பேடு பேருந்து நிலையம், பூந்த மல்லி பேருந்து நிலையம், தாம்பரம் நிலையம் பேருந்து நிலையம், தாம்பரம் ரயில் நிலையம், கே.கே.நகர், மாத வரம் பேருந்து நிலையம் ஆகும்.

மாதவரம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ரெட் ஹில்ஸ் பொன்னேரி, கும்மி டிப்பூண்டி, ஊத்துக் கோட்டை வழியாக ஆந்திரா செல்லும் பேருந்துகள் இயக் கப்பட உள்ளன.

கலைஞர் நகர் (கே.கே. நகர்) பேருந்து நிலையத்திலி ருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் செல்லும் பேருந்துகள் இயக் கப்பட உள்ளன.

தாம்பரம் மெப்ஸ் அண்ணா பேருந்து நிலையத்தில் இருந்து திண்டிவனம், விக்கி ரவாண்டி, பண்ருட்டி, கும்ப கோணம் ஆகிய பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

திண்டிவனம் வழியாக திருவண்ணாமலை, போளூர், பண்ருட்டி, நெய்வேலி, வட லூர், சிதம்பரம், காட்டுமன் னார்கோவில், புதுச்சேரி, கட லூர் செல்லும் பேருந்துகள் தாம்பரம் ரயில்வே நிலைய பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி பேருந்து நிலை யத்தில் இருந்து வேலூர், ஆரணி, ஆற்காடு, திருப்ப த்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, ஒசூர், திருத்தணி, திருப்பதி ஆகிய இடங்களுக்கு இயக் கப்பட உள்ளன.

கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து மயிலா டுதுறை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை,தூத்துக்குடி, திருச்செந்தூர், , நாகர்கோ வில், மார்த் தாண்டம், கன்னி யாகுமரி, விழுப்புரம், கள்ளக் குறிச்சி, காரைக்குடி, புது க்கோட்டை, அரியலூர், திண் டுக்கல், விருதுநகர், திருப்பூர், பொள்ளாச்சி, ஈரோடு, ராம நாதபுரம், சேலம், கோயம்பு த்தூர், பெங்களூரு உள் ளிட்ட பகுதிகளுக்கு பேருந் துகள் இயக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகத்தினர் முழுமையாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம் .எல்.ஏ. அறிக்கை!



கிருஷ்ணகிரி, அக்.30-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல மைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக தலைவருமான தளபதியார் அவர்களின் அறிவுரைப்படி இந்திய தேர்தல் ஆணையம் வரும் 01.01 .2024 ஆம் தேதி தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்காணும் அட்டவணைப்படி அறிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிகளில்

27.10.2023 முதல் 09.12 2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும், பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது.

இது தவிர நவம்பர் மாதம் 4, 5, 18, 19 ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடத்தப் பட உள்ளன.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது பெயர் விவரங்களை சரி பார்த்து விடுபட்டவர்களும் இடம் மாறிய வாக்களங்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 271.02.023

பெயர்களை சேர்த்த, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12. 2023 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் நாட்கள் நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவது 01 .01.2024 மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர்கள் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள், மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழக அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு இந்த பணியின் விவரங்களை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு :

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தினர் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பாக முகவர்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி தலைமையில் கிருஷ்ணகிரி முன்னாள் மாவட்ட கழக செயலாளரும்,மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளருமான டி.செங்குட்டுவன் முன்னிலையில் நீட் தேர்வுக்கு எதிரான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி,மாவட்ட வழக்கறிஞர் அனி தலைவர் முத்த வழக்கறிஞர்.பி.கே.தாஸ், அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர்கள் விஜயன், வடிவேல் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### உண்மை நிலையை அறியாமல் பா.ஜ.க. தலைவர் பேசி வருகிறார்!

# நாமக்கல் கவிஞருக்கு உரிய மரியாதையை தி.மு.க. அரசு எப்போதும் வழங்கி வருகிறது!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. பேட்டி!



நாமக்கல் அக். 30 -

நாமக்கல் புதிய பேருந்து நிலையத்திற்கு கலைஞர் பெயரை வைக்கும் விவகாரத்தில், உண்மை நிலையை அறியாமல் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை பேசி வருகிறார் . நாமக்கல் கவிஞருக்கு உரிய மரியாதையை தி.மு.க. அரசு எப்போதும் வழங்கி வருகிறது கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி பேட்டியில் கூறியுள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார் நாமக்கல்லில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

நாமக்கல்லில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டையொட்டு முன்னிட்டு அவரது பெயரை வைக்க வேண்டுமென நாமக்கல் நகர் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார். பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை அண்மையில், கோவையில் அளித்த பேட்டி ஒன்றில் நாமக்கல்லில் உள்ள பேருந்து நிலையத்திற்கு நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை பெயரை சூட்டலாமே என தெரிவித்திருந்தார்.

நாமக்கல் மக்களுக்கு பெருமை சேர்த்த கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, அவரது புகழை உலகம் முழுக்க பரப்பியதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது. நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களது பெயரில் கடந்த 1969 ஆம் ஆண்டு நாமக்கலில் அரசு கல்லூரிக்கு நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை என பெயர் சூட்டியதும், தமிழ்நாடு சட்டசபையில் நாமக்கல் கவிஞர் மாளிகை என பெயர் வைக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

ஏனென்றால் நாமக்கல் மக்களுக்கு புகழ் சேர்க்கின்ற வகையில் அவரது பெயரை வைத்து இருந்தார். நாமக்கல் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கவிஞருக்கு மார்பளவு சிலை வைக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தனர். அதனை ஏற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல்லில் உள்ள நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் கவிஞருக்கு மார்பளவு சிலை திறந்து வைத்தார்.

இந்த சிலை திறப்பு விழாவின் போது கவிஞரது குடும்பத்தினர் அமைச்சரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அம்மனுவில் நாமக்கல் கவிஞர் அரசு நினைவு இல்லத்தில் மார்பளவு சிலை வைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இதை அடுத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சென்று அரசாணை பெறுவதற்கான முயற்சி எடுத்தார் அதன் பயனாக தமிழ்நாடு அரசு நாமக்கல்லில் உள்ள கவிஞரது பூர்வீக இல்லத்தில் நினைவு இல்லத்தில் ரூ. 20 லட்சம் மதிப்பில் மார்பளவு சிலை நிறுவுவதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் ஆட்சி செய்து வரும் திராவிட மாடல் அரசு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மண்ணுக்கு பெயர் சேர்த்த நாமக்கல் கவிஞரின் பெயரையும், புகழையும் நிலைநாட்டும் விதமாக கவிஞரது பூர்வீக இல்லத்தில் மார்பளவு சிலை அமைக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் நாமக்கலில் புதிதாக அமைய உள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு நாமக்கல் கவிஞர் பெயரை வைக்க வேண்டும் என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கோரிக்கை வைத்துள்ளார். திராவிட முன்னேற்ற கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சியில் இருந்தாலும் நாட்டுக்காக விடுதலைக்காக பாடுபட்டவர்கள், இனத்திற்காகவும், மொழிக்காகவும், பாடுபட்டவர்களுக்கு பெருமை சேர்ப்பதற்கு நினைவு இல்லங்கள், சிலைகள் அமைப்பதற்கு என்றைக்கும் தவறியதில்லை. கவிஞரது குடும்பத்தினர் மட்டுமல்லாது நாமக்கல் மக்கள் மட்டும் இல்லாது இந்த தமிழ் சமுதாயமே பாராட்டக் கூடிய வகையில் அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு அரசு சார்பில் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு தலைவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற நேரத்தில் அந்தத் தலைவனுடைய பணிகளை போற்றும் விதத்தில் அவரது பெயரில் நிகழ்ச்சிகள் நடத்துவதும், சிலைகள் அமைப்பதும் வழக்கம். அந்த வகையில் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடி வருகிறோம். அந்த வகையில் நாமக்கல் நகர் மன்றம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் வகையில் புதிய பேருந்து நிலையத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது அரசாணைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடந்த 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்டு தனியாக நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அடிப்படை பணிகளை செய்து உள்ளார். நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கலுக்கு உயிரோட்டமாக உள்ள முட்டை தொழில் ஊக்குவிக்கும் வகையில் சத்துணவிலே முட்டை சேர்த்து கோழிப்பண்ணை தொழிலை உயர்த்தி விட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த அளவுக்கு சிறப்பு பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக புதிய பேருந்து நிலையத்திற்கு பெயர் வைப்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது எல்லாம் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலைக்கு தெரியவில்லை. வரலாற்றை திரும்பி பார்க்க வேண்டும். அவர் உண்மைத் தன்மையை அறிய வேண்டும். கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களது பெயரையும், புகழையும் சேர்க்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் செயலாற்றி வருகின்றனர் என்பதை அறிய வேண்டும் உண்மையை அறிந்து பேச வேண்டும் ஒரு இயக்கத்திலே மாநிலத் தலைவராக இருப்பவர் உண்மை நிலையை தெரியாமல் பேசுவது சரியானதல்ல. குஜராத்தில் உள்விளையாட்ட அரங்கத்திற்கு பிரதமர் மோடியின் பெயரை வைத்துள்ளனர்.

வாஜ்பாய் பெயரை ஏன் வைக்கவில்லை? என ராஜேஸ்குமார் எம்.பி கேள்வி எழுப்பினார்.

பா.ஜ.க. மூத்த தலைவர்கள் இருப்பவர்களை பற்றி அறிந்து கொள்வதில்லை. பிரதமர் மோடியின் ஆட்சியில் கணக்கு தணிக்கை அறிக்கை ரூ. 7.5 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது. அதை மறைக்க இது போன்ற உண்மையை உணராமல் அண்ணாமலை பேசி வருவது மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தாது.

ரூ.7.5 லட்சம் கோடி இழப்பு மோசடி நடந்துள்ளதை இந்திய அரசே நாடே அறிந்திருக்கிறது. அதை மறைப்பதற்கு என்ன பேச வேண்டும் எதை பேச வேண்டும்? எதைக் குறித்து பேச வேண்டும்? அறியாமல் பேசி வருவது பேசிவருவது அவரது பேச்சின் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை உண்மையை அறிந்து பேச வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த பேட்டியின் போது நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நகராட்சி தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நீட் தேர்வை ரத்துசெய்திட கோரும்

# மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் “இரண்டாம் கட்ட நிகழ்வு”

## மாவட்டச்செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை



திருவாரூர், அக்.30-

திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதல்வர்,கழக தலைவர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி , திமுக இளைஞர் அணி , மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வை ரத்துசெய்ய கோரி நடைபெறும் மாபெரும் கையெழுத்து இயக்கம், இளைஞர்களின் எதிர்காலம், கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சென்னையில் துவக்கி வைக்கப்பட்ட நிலையில் , இந்த மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் 2 வது கட்ட நிகழ்வு, திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் இன்று (30.10.2023)திங்கள்கிழமை காலை 10 மணி அளவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையிலும், கழக அமைப்பு செயலாளர் உயர்திரு ஆர்.எஸ்.பாரதி அவர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது.

எனவே அது சமயம் மாவட்டநிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் , தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி , மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் பங்குபெறுவதொடு, அந்தந்த பகுதிகளை சேர்ந்த கழக உடன் பிறப்புக்கள் மற்றும் கழக முன்னோடிகளை கலந்துகொள்ள செய்து கையெழுத் திட்டு நீட் தேர்வு எதிர்ப்பினை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் வண்டுவாஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு ஸ்மார்ட் டி.வி.யை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் வழங்கினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் உதயம் வே.முருகையன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் சோ.ரவிச்சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.


நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்.
பசும்பொன் தேவர் திருமகனார்
116வது ஜெயந்தி விழா மற்றும்
61வது குரு பூஜை விழாவிற்கு
வருகை தரும்
ARASU ARTS
தேசியமும்,
தெய்வீகமும்
எனது இரு கண்கள்
என்ற தேவர் பெருமகனாரின் நினைவைப் போற்றும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வணங்கி மகிழ்கிறோம்...
அன்புடன் வரவேற்கும்
R.S.ராஜகண்ணப்பன் B.Sc.,B.L.,
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
மாவட்டக் கழகச் செயலாளர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.


கலைஞர் 100
1924 - 2023
இந்திய சுதந்திர
போராட்ட வீரர்
பசும்பொன்
முத்துராமலிங்கனார்
நினைவிடத்திற்கு
மரியாதை செலுத்த
முகவைக்கு
வருகைதரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
இந்தியாவின்
ஒட்டுமொத்த
ஜனநாயக குரலாக
ஒலித்துக்கொண்டிருக்கும்
கழகத்
தலைவர்
அவர்களை வருக! வருக!!
என வரவேற்கிறேன்.
மாண்புமிகு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள்
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும்
சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் அமைச்சர்
திரு. காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் MLA அவர்கள்
மாவட்ட கழக செயலாளர்
பேரன்புடன்
வழக்கறிஞர்
இரா.ராஜீவ்காந்தி
கழக மாணவரணி தலைவர்



வாழ்க தளபதி
வளர்க தொ.மு.ச
போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு
20% சதவிகித போனஸ் 01-07-2023 முதல் 4 சதவிகித
அகவிலைப்படி உயர்வு வழங்கிய போக்குவரத்துக்
கழகத் தொழிலாளர்களின் நம்பிக்கை நாயகர்
மாண்புமிகு
தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும்
தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு
சா.சி.சிவசங்கர் BE.,MBA அவர்களுக்கும்
போக்குவரத்து துறை அமைச்சர்
மரியாதைக்குரிய
மு.சண்முகம் MP அவர்களுக்கும்
தொ.மு.ச.பேரவை பொது செயலாளர்
உயர்திரு
கி.நடராசன் அவர்களுக்கும்
தொ.மு.ச.பேரவை பொருளாளர்
நன்றி! நன்றி!! நன்றி!!!
சே.மணி தலைவர்
தா.இரமேஷ் பொதுச்செயலாளர்
மு.கிருஷ்ணன் பொருளாளர்
மற்றும் அனைத்து நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (வேலூர்)
தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
பதிவுஎண் 820/ : NAT, பேரவை இணைப்பு எண் : 405.வேலூர் மண்டலம்




அரசு போக்குவரத்து தொழிலாளர்களுக்கு கடுமையான
நிதிநெருக்கடியிலும் 20% தீபஒளி போனஸ் வழங்கிய
திராவிட நாயகர், மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
S.S.சிவசங்கர் அவர்களுக்கும்
தொ.மு.ச.பேரவை பொதுச்செயலாளர்
M.சண்முகம் M.P அவர்களுக்கும்
சேலம் தொ.மு.ச. சிறப்புத்தலைவர்
இரா.இராஜேந்திரன் B.A.B.L.,M.L.A., அவர்களுக்கும்
செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.
தொ.மு.ச. பேரவை பொருளாளர்
கி.நடராஜன் அவர்களுக்கும்
சேலம் மண்டல போக்குவரத்து தொழிலாளர்கள் சார்பில் மனமார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
அரசு போக்குவரத்து தொ.மு.ச. சேலம் மண்டலம்.




அக்டோபர்-30ல்
பசும்பொன் தேவர் ஜெயந்தி விழா
வணங்குதலுக்குரிய
தலைவருக்கு
மக்களின் மனம் கவர்ந்த
தலைவரின்
மரியாதை!
பெருநாழி வி.போஸ் B.Com., திமுக மாநில இலக்கிய அணி





எண்ணற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் , இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். கேலரி தடகள ஓடுதளம் உள்ளிட்ட வசதிகளைப் பார்வையிட்டு அவற்றை முறையாக பராமரிக்க வேண்டுமென விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் மற்றும் விளையாட்டு அரங்க பணியாளர்களை வலியுறுத்தினார்.

## பெண்கள் பொருளாதாரத்தில் பெறும் தன்னிறைவே, பெண்ணுரிமைக்கான அடித்தளம்!

# மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் - மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும்!

## திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

நெல்லை, அக். 30 -

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1200 டெபிட் கார்டுகள் வழங்குவது உட்பட 9 ஆயிரம் பயனாளிகளுக்கு 157 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகம் எதிரில் உள்ள வர்த்தக மையத்தில் 27.10.2023 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டமன்ற பேரவைத் தலைவர்.மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில்

ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, திருநெல்வேலி மாநகராட்சி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மகளிர் திட்டம், கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் தூய்மைப்பணி டிராக்டர், மூன்று சக்கர ஸ்கூட்டர்கள், மின்சார தையல் இயந்திரம், வீட்டு மனைப்பட்டாக்கள், விவசாய கடன் அட்டை, கல்வி கடன்கள், தொழில் கடன்கள் உள்ளிட்ட 9 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கட்டிடங்கள் மற்றும் பாலங்கள், திருநெல்வேலி மாநகராட்சி சார்பில் அரசு மருத்துவமனையில் உறவினர்கள் தங்கும் அறைகள் என புதிய திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1200 டெபிட் கார்டுகள் மற்றும் 9 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.157 கோடியே 33 லட்சம் அளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார். 1 கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும், கிட்டத்தட்ட 2 லட்சத்து 48 ஆயிரம் பேர் பயன்பெற்றுள்ளனர். ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல் படுத்தப்பட்டது, இதுவே முதல்முறை. இந்த திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி தான் உங்களுக்கு உரிமைத் தொகை வழங்குவதற்கான தேதி என்றாலும், ஒரு நாள் முன்னதாக 14 ஆம் தேதியே கழக அரசால் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு 1200 டெபிட் கார்டுகளை வழங்குகிறோம் என்றால், இவை பணம் எடுப்பதற்கான கார்டுகள் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையை மாற்றப் போகிற துருப்புச்சீட்டு. இந்தத் திட்டத்தை பின்பற்றி, கர்நாடகா, தெலங்கானா போன்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எந்த ஒரு அரசு திட்டத்தை செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைப் பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கப்படாதவர்கள், மீண்டும் மேல்முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம். இதுவரை 11 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர். மேலும், உங்கள் மேல்முறையீட்டைப் பரிசீலிக்க துணை ஆட்சியர், சார் ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு பயிற்சிகளை வழங்கி யுள்ளோம். மகளிர் மட்டுமன்றி திருநங்கையர், மாற்றுத்திறனாளிகளும் இன்றைக்கு இந்தத் திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர். மேல்முறையீடு செய்வதற்கான காலம் நேற்று முன் தினத்தோடு முடிவடைந்த நிலையில், அந்த மேல்முறையீட்டு மனுக்களின் மீதான பரிசீலனையை நேற்று சாத்தூர் கோட்டத்தில் ஆய்வு செய்தோம். நான் சட்டமன்றத்தில் பேசியது போல், தகுதியுள்ள ஒரு மகளிர் கூட இந்த திட்டத்தில் இருந்து விடுபட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தோடு செயல் பட்டு வருகிறோம்.

அது மட்டுமன்றி, அரசின் நலத்திட்டங்கள் உடனுக்குடன் மக்களை சென்றடைய வேண்டும். குறிப்பாக, ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களின் வாழ்வு மேம்பட வேண்டும். இது தான் நம் திராவிட மாடல் அரசின் லட்சியம். அதன் வெளிப்பாடு தான், இன்றைக்கு, மகளிர், மாற்றுத்திறனாளிகள், ஆதி திராவிடர், பழங்குடியினர் என அனைத்து தரப்பு மக்களுக்கும் வீட்டு மனைப் பட்டா , அரசு மருத்துவமனைக்கான உறவினர்கள் தங்கும் அறைகள், வங்கிக் கடன், சுழல் நிதி, விவசாய கடன் அட்டை, வணிக கடன், தொழில் மானியக் கடன், கல்விக்கடன் என 9 ஆயிரம் பேருக்கு 157 கோடியே 33 லட்சம் அளவில் நலத்திட்டங்களை வழங்குகிறோம்.

### மாணவிகளுக்கு வாழ்த்துகள்

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள், கல்வி, இலக்கியம், விளையாட்டு ஆகிய அனைத்து துறைகளிலும் முன்னேறிட வழிகாட்டும் வகையில், அன்பாடும் முன்றில் எனும் குறும்படத்தையும் வெளியிட்டுள்ளோம். இதனை பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் வாழ்வில் சிறக்க என் வாழ்த்துகள்.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது. நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதை செய்தார்கள், கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றம் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று பெரியார் சொன்னார். ஒன்று, கலாச்சார ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, சட்ட ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று, பொருளாதார ரீதியாக தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்று பெரியார அவர்கள் சொன்னார்கள்.

பெண்கள் முன்னேற்றத்துக்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் என்னென்ன? தந்தை பெரியார் அவர்களே சொன்னார், பணக்காரன் , ஏழை அடிமைத்தனத்தை விட, மேல்ஜாதி, கீழ்ஜாதி அடிமைத்தனத்தை விட, முதலாளி, தொழிலாளி அடிமைத்தனத்தை விட மோசமனது இந்த ஆண், பெண் அடிமைத்தனம் என்று சொன்னார்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. பெண்களுக்கு படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும் தான் பெண்களுக்கு வேலை. இப்படி தான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இது எல்லாத்தையும் எதிர்த்து பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தது நம்முடைய திராவிட இயக்கம். கழக அரசின் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான நமது திராவிட மாடல் திட்டங்கள். இரண்டாவதாக, சட்ட ரீதியாகப் பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை என்ன? ஒரு தாய் வயிற்றில் பிறந்தாலும், ஆண் பிள்ளைக்கு மட்டும் தான் அப்பா சொத்திலே உரிமை இருக்கிறது. பெண் பிள்ளைக்கு சொத்திலே உரிமை கிடையாது என்கிற நிலை தான் சட்ட ரீதியாக இருந்தது. ஆனால், நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தான், தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமைக் கிடைத்திருக்கிறது. இதற்கு காரணம் நமது திமுக அரசு கொண்டு வந்த சட்டம் தான்.

### ஆண்களுக்கு நிகராக பெண்கள் வளர வேண்டும்!

அடுத்ததாக, பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக் கூடிய முட்டுக்கட்டைகள் என்ன? ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது, பணத்திற்காக தனது அப்பாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காக கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்த பெண் வயது முதிர்ந்த காலத்தில் பணத்திற்காக தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும். இப்படி தான் இருக்கிறது பெண்களின் நிலை. இந்த நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும்.

எனவே தான், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிக முக்கியமானது. 17 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தை குறைக்கக் கூடியத் திட்டம் அது. காலையிலே எழுந்து வேலைக்கு செல்லக் கூடிய பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு டிபன் சமைச்சு வச்சுட்டு போறது எவ்வளவு சிரமம். அந்த சிரமத்தை இந்த திட்டம் போக்கியிருக்கிறது. இதுவரை நமது கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம். இந்த திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் வைத்திருக்கும் பெயர் தான் இதிலே முக்கியமானது. இந்த திட்டம் மகளிருக்கான உரிமை என்பதால், இதற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று பெயர் வைத்துள்ளார்கள். பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக, சகோதரனா இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதே போல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும். பெண்கள் மொபைல் பயன்படுத்துகிறீர்கள். உங்களுக்கு நிறைய செய்திகள் வரும். அப்படி வருகிற செய்திகள் உண்மையா பொய்யா என்று நீங்கள் ஆராய்ந்து அதனை மற்றவர்களுக்கு ஷேர் செய்ய வேண்டும். இப்போது, உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீதம் பெண்கள் வந்திருக்கிறார்கள். அதனால் தான் தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ஒன்றியக்குழு தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகிய பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர். இந்த சாதனையை நடத்திக் காட்டியது நம் திராவிட மாடல் அரசு.

இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் சொன்னது தான். மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காக சிந்திக்க வேண்டும். அப்போது தான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும். ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள்.

எனவே, பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும்.கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயனாளிகள் மற்றும் பிற துறைகளின் பயனாளிகளாக இங்கு வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.கழக அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்ல நீங்கள் ஒவ்வொருவரும் தூதுவர்களாக மாறிட வேண்டும்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்.மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர். பி.எம்.சரவணன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர்.தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர். கே.ஆர்.ராஜு மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர்.டி.பி.எம். மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதி அளித்ததற்கு நன்றி!

# ரூ.122.5 கோடியில் 6 புதிய கிடங்குகள் - சேமிப்பு தளங்கள்!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

*சென்னை, அக்.30-*

*முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருங்குடி மக்களால் விளைவிக்கப்பட்ட நெல்மணிகளைப் பாதுகாக்க 122.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.32 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள் மற்றும் 40 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் கட்டுமானப் பணிகளைத் துவக்கிட அனுமதி ஆணை அளித்துள்ளார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*



*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொன்விழா கண்டு கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் நேரத்தில் தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்து, சேமித்து வழங்கும் பணிகளோடு நெல் கொள்முதல் பணிகளையும் தொடர்ந்து சிறப்பாகச் செய்து வருகிறது.*

*நெல் கொள்முதலின் போது ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு 238 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்ததால் 18 இடங்களில் 2,86,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. உணவு தானியங்களைச் சேமிக்க 12 வட்டங்களில் 28 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவில் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 கிடங்குகள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டுள்ளன. இதன் அடுத்த கட்டமாக, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் கடலூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் 65,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்ட 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய டெல்டா அல்லாத மாவட்டங்களில் 52,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்ட 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், உணவுப் பொருள்களின் சேமிப்புக் கொள்ளளவினை அதிகப்படுத்துவதற்காக மொத்தம் 6,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் திருவள்ளூர் மாவட்டத்தில் இராமகிருஷ்ணராஜபேட்டையிலும் மதுரை மாவட்டத்தில் மதுரை மேற்கிலும், விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டையிலும் 3 புதிய சேமிப்புக் கிடங்குகள் கட்ட 12 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், காஞ்சிபுரம், மதுரை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மொத்தம் 8,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட மூன்று புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள் கட்ட 15.5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும், ஆக மொத்தம் 122.5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.*

*இத்திட்டத்தால் 1.32 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் சேமிக்கப்படுவதோடு, தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், மதுரை, நீலகிரி மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள சுமார் 10.5 இலட்சம் எண்ணிக்கையிலான நெல் விவசாயிகளும் பயனடைவதோடு நெல்லும் பாதுகாப்பாகச் சேமிக்கப்படும்.*

*தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் புதிய திட்டங்களுக்கு அனுமதி அளித்து அதன் வழியாகத் தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினையும் மக்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதையும் உறுதி செய்திட தாயுள்ளத்தோடு உதவிடும் முதலமைச்சர் அவர்களுக்கு உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*


தமிழ்நாடு மின்வாரிய
பணியாளர்களுக்கு
கருணைத் தொகையுடன்
போனஸ் 20%
மற்றும்
01-07-2023 முதல்
முன்தேதியிட்டு அகவிலைப்படி
உயர்வு 42% - ல்
இருந்து 46% (4%)
உயர்த்தி வழங்கிய
தொழிலாளர் நலன் காக்கும்
திராவிட பேரரசர்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
எங்களின் நெஞ்சார்ந்த நன்றியினை
தெரிவித்துக்கொள்கிறோம்
மாண்புமிகு நிதி மற்றும் மின்துறை அமைச்சர்
தங்கம் தென்னரசு
பொதுச்செயலாளர்-தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை
மு.சண்முகம் MP
பா.மணிமாறன்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
பேரவைச்செயலாளர்-தொ.மு.ச
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
OVIYAR NAGAA
@9524198893


நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், ராமநாதபுரம்.
தெய்வத்திருமகன் பசும்பொன்
முத்துராமலிங்க தேவர்
குரு பூஜை
தமிழகத்தின்
வெற்றித் திருமகன்
திராவிட
நாயகனே!
வருக! வருக!!
ARASU ARTS
அன்புடன் : கே.ஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (28.10.2023) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொது மக்களின் நலனுக்காக தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், சமூக ஊடக தளம் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திரரெட்டி, சிறப்பு செயலாளர் தி.ந.வெங்கடேஷ், போக்குவரத்துத்துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம் மற்றும் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

### இராமேஸ்வரம் காசி ஆன்மிகப் பயணத்தில்

# 2023ல் 300 பேர் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக்.30-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலிலிருந்து காசி அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு தமிழ்நாட்டிலுள்ள 20 மண்டலங்களிலிருந்து 300 நபர்கள் ஆன்மிகப் பயணம் இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும், தகுதி வாய்ந்த நபர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் எனவும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



2022-2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில், “இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலிலிருந்து காசி அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு இவ்வாண்டில் 200 நபர்கள் ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்பவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சத்தை அரசே ஏற்கும்”. என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 200 நபர்கள் அரசு நிதியில் காசிக்கு ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் “ஆன்மிகப் பயணமாக இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலிலிருந்து காசி அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு கடந்த ஆண்டு 200 நபர்கள் அழைத்துச் செல்லப்பட்டதைப் போல, பக்தர்கள் ஆர்வத்தை கருத்தில் கொண்டு, இவ்வாண்டு 300 நபர்கள் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.75 இலட்சத்தை அரசு ஏற்கும்” என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்த ஆன்மிகப் பயணத்திற்கு அழைத்துச் செல்ல இந்து சமய அறநிலையத்துறையின் 20 இணை ஆணையர் மண்டலங்களில், மண்டலத்திற்கு 15 நபர்கள் வீதம் 300 நபர்களை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும், 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்ப படிவங்களை சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்திலிருந்து நேரில் பெற்று கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரிய இணைப்புகளுடன் மீள அதே மண்டல இணை ஆணையர் அலுவலகத்திற்கு 20.11.2023 க்குள் அனுப்பி வைக்க வேண்டும். மண்டல இணை ஆணையர்கள் பரிந்துரைக்கும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஆன்மிகப் பயணத்திற்கு தேர்வு செய்யப்படுவர்.

மேலும் ஆன்மிக பயணம் குறித்த விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகம் அல்லது www.hrce.tn.gov.in என்ற துறையின் இணையதளத்தில் தெரிந்துக் கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே..பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், அக். 30-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகளுக்கும் மற்றும் கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதி களுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (Blc) மாவட்ட செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வ தற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்பு பவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம் 6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023

2 பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை

3 சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11.2023

18, 19.11.2023

4 இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 05.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### முதல் கட்டமாக ரூ.50 கோடி மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைப்பு!

# மொரப்பூர் ரயில் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி தொடக்கம்!

## தருமபுரி செந்தில்குமார் எம்.பி. தகவல்!

தருமபுரி, அக்.30-

தருமபுரி மாவட்ட மக்களின் 80 ஆண்டு கால கனவு திட்டம் தருமபுரி மொரப்பூர் இணைப்பு ரயில் திட்டம். இத்திட்டத்திற்காக 2023 மத்திய பட்ஜெட்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தருமபுரி மொரப்பூர் ரயில் திட்டத்திற்கு தேவையான நிலங்கள் அளவிடப்பட்டு நில உரிமையாளர்களுக்கு நிலத்திற்கான தொகை நிர்ணயம் பணிகள் முடிவடைந்தது.

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார் அதற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங் அவர்களை சந்தித்து ரயில் திட்டத்திற்கு நில அளவை பணிகள் முடிவடைந்தது நிலத்திற்கான தொகையை விடுவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து நில அளவைப் பணி மற்றும் நில உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய தொகை 50 கோடி ரூபாயை முதல் கட்டமாக ரயில்வே துறை விடுவித்துள்ளது.

மேலும் தருமபுரி மாவட்டம் மொரப்பூர் மற்றும் பொம்மிடி ரயில் நிலையங்களில் பொதுமக்களின் கோரிக்கை யான கோவை சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ். கன்னியாகுமரி பெங்களூர் எக்ஸ்பிரஸ் பொம்மிடி ரயில் நிலையத்திலும் சென்னை திருவனந்தபுரம் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ். கோயமுத்தூர் திருப்பதி இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் மொரப்பூர் ரயில் நிலையத்திலும் நின்று செல்ல வேண்டுமென தெற்கு ரயில்வே மேலாளர் இடம் சந்தித்து நேரடியாக கோரிக்கை வைத்தார்.

தற்போது கோயம்புத்தூரில் இருந்து சென்னை வரை சென்று வரும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் மொரப்பூர் ரயில் நிலையத்தில் குறைந்தபட்சம் இரண்டு நிமிடங்கள் நின்று செல்ல வேண்டும் என கோரிக்கை விடுத்தார் முக்கியமான ரயில்களை மொரப்பூர் மற்றும் பொம்மிடி ஆகிய இரண்டு ரயில் நிலை யங்களில் நிறுத்த வேண்டும் என்று பலமுறை மத்திய அமைச்சர் மற்றும் தெற்கு ரயில்வேயின் பொது மேலாளர் ஆகிய தொடர்பு கொண்டு கடிதத்தின் வாயிலாக கோரிக்கை விடுத்து உள்ளதையும் நாடாளுமன்ற உறுப்பினர் அதிகாரியிடம் வலியுறுத்தினார்.

### இளைஞர்கள் நலனில் அக்கறை கொண்டு

# பல்வேறு வேலைவாய்ப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## ஆலங்குடியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை அக் 30

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (28.10.2023) அன்று துவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு சிறப்பான திட்டங்களையும், வேலைவாய்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. அந்தவகையில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் தொழில் துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 150க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளனர். அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கான பதிவு வழிகாட்டல், சுய தொழில், வங்கி கடன் உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து பிரத்தியேக அரங்கம் அமைத்து ஆலோசனை அளிக்கப்படுகிறது. மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.



இத்தனியார்துறை முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. டிப்ளமோ, பி.இ, நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களும் பங்கேற்று, தங்களது தகுதிகளுக்கேற்ப பணிநியமங்களை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இளைஞர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் வேலைவாய்ப்பு முகாம்களை உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார். இந்நிகழ்வில், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா , இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத்துறை) சந்திரன், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் மு.ராசி முருகானந்தம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) மோ. மணிகண்டன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) பெ. வேல்முருகன், உதவி திட்ட அலுவலர் கே.தில்லைமணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ். உலகநாதன், வட்டாட்சியர் பெரியநாயகி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கோகுலகிருஷ்ணன், ஆயிஷாராணி, ஸ்ரீதேவி அண்ணாத்துரை, டி.தங்கமணி. வெ.முத்துக் கிருஷ்ணன், குமார்(எ) துரைக்கண்ணு, ஆர்.வி.செல்வம், கே..எம்.சுப்பிரமணியன், ஆ.பழனிக்குமார், கே.சி. சிவக்குமார், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், கே.வி.சுப்பையா, உஷா செல்வம், வழக்கறிஞர் கண்ணதாசன், வழக்கறிஞர வாகை சேகர், செங்கோல், வீரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி

# 5 ஆயிரம் தாய்மார்களுக்கு ரூ.50 லட்சம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியம் தகவல்!

சென்னை, அக்.29-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் தாய் சேய் குறைபாடு உள்ள கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்திட வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி திட்டம் 01.07.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டு சிறந்த செயல்பாட்டில் உள்ளது. அதன் தொடர்ச்சியாக நேற்று (28.10.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், 5000 மகப்பேறு தாய்மார்களுக்கு ரூ. 50 இலட்சம் நிதியுதவியினை நேரடி பணப் பரிவர்த்தனை மூலம் தொடங்கி வைத்து, அதில் சிறப்பாக செயல்பட்ட மாவட்டங்களின் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகளை பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

**நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) திட்டம்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 04.11.2023 அன்று முதலமைச்சர் அவர்களின் மூலம் செயல்படுத்தப்பட இருக்கின்ற “நடப்போம் நலம் பெறுவோம்” (Health Walk) திட்டம் நடைமுறை படுத்துவது குறித்து அய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே தமிழ்நாட்டில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரகம் காப்போம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் என்று முக்கியமான திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளது. இது போன்ற ஒரு சிறப்பு திட்டமாக நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) திட்டம் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

ரூ.38.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திட்ட ஆணையம் மூலமாக 01.07.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில், தாய் சேய் குறைபாடு உள்ள 74,400 கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளின், ஊட்டச்சத்தை மேம்படுத்திட வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில், 23 வட்டாரங்களில், நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு, இரத்த சோகை உள்ள தாய்மார்களுக்கு பயன் அளிக்கும் வகையில் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தில் முதல் தவணையாக 4 முதல் 5 மாதம் கர்ப்பம் தரித்த தாய்மார்களுக்கு ரூ.1000, 2வது தவணையாக 5 முதல் 6 மாதம் கர்ப்பம் தரித்த தாய்மார்களுக்கு ரூ.1000, மூன்றாம் தவனையாக 9 மாதம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.1000 தரப்படுகிறது. அதன்பிறகு குழந்தை பிறந்து 6 வது மாதம் ரூ.500, 12வது மாதம் 5வது தவணை தொகை, 18வது மாதம் 6வது தவணை தொகை, 24வது மாதம் 7வது தவணை தொகை ரூ.500 வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ரூ.5000 வழங்கப்படுகிறது. திட்டம் தொடங்கிய நாள்முதல் இதுவரை 8,163 தாய்மார்கள் நிதி உதவி பெற்று பயனடைந்துள்ளனர். இன்று (28.10.2023) 5,294 தாய்மார்களுக்கு ரூ.50 இலட்சம் நிதியுதவியினை நேரடி பணப் பரிவர்த்தனை மூலம் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பாக அனைத்து மாவட்ட துணை இயக்குநர்களுடனான கூட்டம் இன்று நடைபெற்றது.



**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிகிச்சை அளிப்பதில் இதுவரை கால தாமதம் ஏற்படுவதாக புகார்கள் பெறப்படவில்லை. மேலும், இந்த திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பாக குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளை கிடைக்கப் . பெற்றவுடன் முதலமைச்சர் அவர்களிடம் காண்பிக்கப்படும். காப்பீட்டுத் திட்டம் தொடர்பான புகார்கள் அந்தந்த மருத்துவமனையின் மருத்துவர்களிடம் தெரிவிக்கலாம், மேலும் இதற்காக கட்டணமில்லா எண் 1800 425 3993 என்ற எண்ணிற்கு 104 பொது புகார் எண்ணை தொடர்பு கொண்டு புகாரளிக்கலாம்.

**முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் பங்களிப்பு ரூ.3,000/ வரை வழங்கப்பட்டு வருகிறது. மீதி உள்ள ரூ.15,000/இல் ரூ.2,000 மதிப்பில் பெட்டகமும், ரூ.13,000/ பணமாகவும் வழங்கப்படுகிறது. இதில் மொத்தம் 5 தவணைகளாக இந்த தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் முதல் தவணை சுமார் 2 இலட்சம் பேருக்கு வழங்கப்படாமல் காலதாமதம் ஆவதால் இது தொடர்பாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்கள் டெல்லிக்கு சென்று ஒன்றிய அரசின் அலுவலர்களிடம் காலதாமதம் குறித்து தெரிவித்துள்ளார். இன்னும் ஒரு மாதம் காலத்திற்குள் இப்பிரச்சினை முடிவடைந்தவுடன் நிலுவையில் உள்ள ரூ.3,000/ தொகை வழங்கப்பட்டு விடும். ஒன்றிய அரசு தொகை ரூ.3000 மட்டுமே நிலுவையில் உள்ளது. மாநில அரசு வழங்கும் தொகை எதுவும் நிலுவையில் இல்லை.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.எஸ். செந்தில் குமார், தெற்கு ரெயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங்கை சந்தித்து முக்கிய ரெயில்களை மொரப்பூர் மற்றும் பொம்மிடி ரெயில் நிலையங்களில் நின்று செல்ல கேட்டுக்கொண்டார்.





ஈரோடு தெற்கு மாவட்டம் பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி சந்துரு ஏற்பாட்டில் ஈரோடு மாநகராட்சி அ.தி.மு.க. முன்னாள் மாமன்ற உறுப்பினர் பிரியா, சூரம்பட்டி பகுதி எம்.ஜி.ஆர் மன்ற தலைவர் அங்கமுத்து ஆகியோர் அ.தி.மு.க.விலிருந்து விலகி மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

## மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, அக்.30-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் ஆணைக்கிணங்க தமிழ்நாடு கழக முதலமைச்சர் இளைஞரணி அவர்களின் செயலாளர் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாநில மாணவர் அணி இணைச்செயலாளர் சி.ஜெரால்ட், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஜெ.வீரமணி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையச்சூரியன் ஆகியோர் முன்னிலையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர். அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் வருகிற 05.11.2023 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணியளவில் புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள எம் ஏ கிராண்ட் ஹோட்டலில் நடைபெற உள்ளது. இந்த நேர்காணலில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆ.இராசா எம்.பி. நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## பெரம்பலூர் மாவட்டத்தில் நரிக்குறவர்கள் 25 ஜோடிகளுக்கு திருமணம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை! குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை!



பெரம்பலூர்,அக்,30 -

பெரம்பலூர் மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நரிக்குறவர்கள் 25 ஜோடிகளுக்கு இலவச திருமணத்தை தனது சொந்த செலவில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. நடத்தி வைக்கிறார். போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு,

பெரம்பலூர் மாவட்டத்தில் வசிக்கும் நரிக்குறவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த 25 ஜோடிகளுக்கு தாலி, பட்டு வேட்டி,சட்டை,

பட்டு புடவை, சீர்வரிசை பொருட்கள் என அனைத்தையும் தனது சொந்த செலவில் வழங்கி,

இலவச திருமணத்தை கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்பி., தலைமையேற்று நடத்தி வைக்கிறார். பெரம்பலூர் ஜே.கே.திருமண மண்டபத்தில், 01/11/2023,(புதன் கிழமை), காலை 10.00 மணிக்கு நடைபெறும் இந்த திருமணத்திற்கு,

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலை வகிக்கிறார்.

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இதில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய , நகர, பேரூர் செயலாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள்

அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணிகளில்

## தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



தஞ்சை, அக். 30 -

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள், மாவட்ட தேர்தல் பணிக்குழுவினர், வாக்குச்சாவடி நிலைய முகவர்கள், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபடுமாறு தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி விரைவில் வர இருக்கிற நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடி (பூத்) வாரியான அந்தந்த வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி ஆகிய நபர்களை உள்ளடக்கி 100 வாக்காளர்களுக்கு ஒருவர் வீதம் ஒவ்வொரு பூத்திற்கும் பூத் கமிட்டி (பி.எல்.சி) அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாக்காளர் சிறப்பு சேர்க்கை முகாம் மேற்கண்ட தேதிகளில் நான்கு நாட்கள் நடைபெற உள்ளதால் மாவட்ட கழகத்தின் சார்பில் பணிக்குழு அமைத்து வாக்காளர் பட்டியல் சரிபார்த்து முகாம் பணிகளுக்கு அனுப்பிவைக்க உள்ளோம்.

முகாம் நாட்களில் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், தங்கள் பகுதிகுட்பட்ட வார்டு மற்றும் கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் (பி.எல்.ஏ2) ஆகியோருடைய துணையோடு தற்போது வழங்கப்பட்டுள்ள புதிய வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்து அந்தந்த வாக்குச்சாவடியில் உள்ளவர்கள் பெயர் பட்டியலில் வந்துள்ளதா என்றும், இடமாறுதல் செய்துள்ளவர்கள், இறந்தவர்கள், நிரந்தரமாக வெளியூர் சென்றவர்களை கண்டறிந்து அவர்களை நீக்கம் செய்வதுடன், புதியதாக திருமணம் ஆகி வந்தவர்கள், குடிபெயர்ந்து வந்தவர்களை வாக்களர் பட்டியலில் பெயர் சேர்ப்பதுடன், மாவட்ட கழகம் சார்பில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், தங்கள் அணியின் துணை அமைப்பாளர்களுடன் இணைந்து அந்தந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று பூத் நிர்வாகிகள் (பி.எல்.சி), பி.எல்.ஏ2 ஆகியோர்களுடன் நேரில் கள ஆய்வு செய்து 01.01.2024 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களைக் கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க ஆயத்தப்படுத்த வேண்டுகிறேன்.

முகாம் நடைபெறும் நாளான நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு அழைத்துச்சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாடிக்குச் சென்று படிவம்6, 6ஏ, 7, 8 போன்ற மனுக்களின் விபரங்கள் சேகரிப்பதுடன் அன்றைய தேதியில் நமது கழகத்திற்கு ஆதரவு நபர்கள் எத்தனை பேர், புதியதாக வாக்காளர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்டக் கழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்புவதுடன் முகாம் முடிவுற்றால் மேற்கண்ட தேர்தல் பணிகளை தொடர்ந்து செய்து புதிய வாக்களர் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களிலோ, வாக்காளர் சேகரிப்பதற்கான தாசில்தார் அலுவலகத்திலோ, மனு கொடுக்கும் கால அவகாசம் 27.10.2023 முதல் 12.12.2023 வரை கொடுக்கலாம். எனவே, நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு இந்த பணியின் விபரத்தினை மாவட்ட கழக அலுவலகத்திடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பி.எல்.ஏ2 மற்றும் மாவட்ட கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள பணிக்குழுவினர் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சாவூர் வடக்கு மாவட்ட செயலாளரும், ராஜ்யசபா உறுப்பினருமான சு.கல்யாண சுந்தரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட அறிக்கை சம்மந்தமாக இன்று 30.10.2023 திங்கட்கிழமை மாலை 04.00 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், மற்றும் பகுதி செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் கூட்டத்தில் மேற்கண்ட பொறுப்பில் உள்ள அனைவரும் தவறாது கலந்துகொள்றுமாறும் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.



### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்அவர்களால் தொடங்கப்பட்ட

### “உடன்பிறப்புகளாய் இணைவோம்”என்ற மாபெரும் முன்னெடுப்புடன்

### “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு”

### புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

## புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்தியவரலாற்றில் ஜனநாயகமுறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநிலஅமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒருஇலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு. கழகம்.

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டிகாத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒருகோடி உறுப்பினர்கள் சேர்க்க “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டபேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜூன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதியஉறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்.” ஏன கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற ‘தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்’ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதிமுதல் 2023 ஜூன் 3ஆம் தேதிவரை, “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுமற்றும் கழகபவளவிழா ஆண்டு” உறுப்பினர்களை சேர்த்தல்பணிகளை “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒருகோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்றபடிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் 1000 வரை**எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 நவம்பர் 7ஆம் தேதிமுதல் 10ஆம் தேதிக்குள்**,தலைமைக் கழகத்திற்கு நேரில்வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரிபார்த்து பெற்றுச் செல்லவேண்டுமெனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெறமுடியாத நிலை ஏற்படு மாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவாரகாலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பிவைத்திட வேண்டும்.**

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்

### தலைமைக் கழக இரசீது எண். 1 முதல் 1000 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மத்திய
9) திருவள்ளூர் மேற்கு
10) காஞ்சிபுரம் வடக்கு
11) காஞ்சிபுரம் தெற்கு
12) வேலூர்
13) திருப்பத்தூர்
14) விழுப்புரம் வடக்கு
15) கள்ளக்குறிச்சி தெற்கு
16) கடலூர் கிழக்கு
17) தஞ்சை மத்திய
18) தஞ்சை தெற்கு
19) புதுக்கோட்டை வடக்கு
20) சேலம் கிழக்கு
21) சேலம் மத்திய
22) நாமக்கல் மேற்கு
23) கோவை வடக்கு
24) கோவை தெற்கு
25) கோவை மாநகர்
26) திருப்பூர் தெற்கு
27) ஈரோடு வடக்கு
28) மது ரைவடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) தென்காசி தெற்கு

**குறிப்பு :** தலைமைக் கழக இரசீது எண்.1000க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
நாள் : 28-10-2023.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# தேசியமும் தெய்வீகமும் போற்றிய சேது வேங்கைத் தேவர் திருமகனார்!

“மங்கை சூதகமானால் கங்கையில் நீராடலாம், கங்கையே சூதகமானால் எங்கே நீராடுவது?” என்ற வரலாற்று வரிகளைத் தந்த தேவர் திருமகனார் பிறந்த நாள் இன்று! அவர் நினைவு நாளும் இதே அக்டோபர் 30 தான்.

ஒரே நாளில் இப்படியான பிறப்பும், இறப்பும் நடப்பது என்பது அபூர்வமானது. தேவர் வாழ்விலும் இது நடந்தது.

இராமநாதபுரம் கமுதி அருகே உள்ள “பசும்பூண்” எனும் சிறு நகர் தற்போது ‘பசும்பொன்’ என்று மருவி வழங்கப்படுகிறது. அதிலும் பழம்பெயரும், ‘இயற்பெயருமான ‘தவசிக்குறிச்சி’ என்பதே பிற்றை நாளில் ‘பசும் பொன்’ என்பது ஆயிற்று. பழங்காலத்தில் தவசியர்கள் என்ற முனிவர்கள் இங்குள்ள காட்டுப்பகுதியில் ஆசிரமங்கள் அமைத்து தவயோகங்களில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தனர் என்பதால் இப்பெயர் இடம்பெற்றது.

1908ஆம் ஆண்டு அக்டோபர் 30 வெள்ளிக்கிழமை அன்று வீரர் எனும் மறவர் குடியில் தந்தை உக்கிரபாண்டியத்தேவருக்கும், தாயார் இந்திராணி அம்மையாருக்கும் பிறந்தவர் முத்துராமலிங்கத் தேவர் ஆவர்.

தமது தாயாரை ஆறு மாதக் குழந்தையாக இருக்கும்போதே இழந்த இவர், தம் பாட்டி இராணி அம்மையாராலேயே பெரிதும் வளர்க்கப்பட்டார் என்றாலும், ‘ஆயிஸா அம்மாள்’ என்கிற ஓர் இசுலாமியத் தாயாரிடம் பால் குடித்து வளர்ந்தார்.

பால் ஊட்டிய தாயார் மீது தன் கடமையுணர்வு மிகுந்தவராய், தமது நிலங்களை தானமாக அளித்து, இன்றுவரை அவரின் பரம்பரையினர் அதனை அனுபவித்து வருகிற நிலைக்கு உருவாக்கித் தந்துள்ளார். கல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த தேவர் திருமகன், ஆயிஸா அம்மாள் மறைந்து விட்டார் எனும் செய்தியறிந்து, நிகழ்ச்சியில் பங்கேற்காமல் ஓடோடித் திரும்பி வந்து அவர் அஞ்சலி செலுத்தி, அதற்கான ஈமச்சடங்குகளை செய்த பெருமையைச் சரித்திரம் பதிவு செய்துள்ளது.

‘இளமையில் கல்’ எனும் வாய்மொழிக்கேற்ப கமுதி அமெரிக்கன் மிஷன் ஆரம்பப் பள்ளி, 1920இல் மதுரை பசுமலை உயர்நிலைப்பள்ளி 1924இல் அய்க்கிய கிருத்துவ உயர்நிலைப் பள்ளி, பிறகு இராமநாதபுரம் அரசர் பள்ளியில் இறுதி வகுப்பு முடித்தார்.

இளமையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்யம் பெற்றிருந்ததோடு, சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஞானம், தத்துவம் போன்றவற்றிலும் தணியா ஆர்வம் காட்டிப் பயின்று நின்றார். தவிர, குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பம், துப்பாக்கி சுடுதல், வர்மக்கலை போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றார்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்கள் அதைப் போலச் சின்னஞ்சிறு பருவத்திலேயே முத்துராமலிங்கத்தேவர் வீரச்செயல்களில் ஈடுபட்டு எதற்கும் அஞ்சாதவராக வாழ்ந்து வந்தார்.

1927இல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு மாநாட்டிற்கு, தனது அரசியல் குருவான சென்னை எஸ். சீனிவாச ஐயங்காருடன் சென்றிருந்தார். அம்மாநாட்டில் உரையாற்றியோர் சொற்பொழிவுகளிலிருந்து பல்வேறு தகவல்களைப் பெற்றதுடன், தேசிய தலைவர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புகளையும் பெற்றார். காங்கிரசு இயக்க வளர்ச்சிக் கொள்கைகளில் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் பயன்பாடு, சமூகநீதி போன்றவற்றில் ஈடுபாடு காட்டியதுடன், சமயமும், நாடும் தமது இரு கண்களாகக் கருதினார்.

தேவர் திருமகனின் கன்னிப்பேச்சு 1933 ஜுன் 23ஆம் நாள் சாயல்குடி விவேகானந்தா வாசக சாலை முதலாமாண்டு விழாவின்போது நடந்தது. அவ்விழாவில் கலந்து கொள்ளத்தான் சென்றிருந்தார் தேவர். சேதுராம செட்டியார் தலைமை வகித்திருந்தார். ஆனால், விழாவிற்கு வரவேண்டிய சிறப்புப் பேச்சாளர் வரவில்லை. தற்செயலாக அங்கு வந்திருந்த தேவர் திருமகனை அழைத்துப் பேச வைத்தனர் விழாக்குழுவினர். மேடை ஏறினார் தேவர்.

“இந்திய விடுதலைக்கு ஒவ்வொருவரும் போராட வேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்து பேசினார். அவரது உரையைக் கேட்போர் வியக்கும் வண்ணமும், வசீகரிக்கும் வண்ணமும், வரலாற்றுச் சிறப்புடையதாக மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக அமைந்தன.

தலைசிறந்த ‘சுதேச மித்திரன்,’ ‘தமிழ்நாடு’ என்பன ஏடுகளை அந்நாள்களில் மக்களிடையே பரப்பியதுடன் வாசகர்கள் எண்ணிக்கையை உயர்த்திட நின்றார்.

1932இல் கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டார். மதுவால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்காட்டி மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தார்.

1933-34இல் தொண்டர்களைத் திரட்டி முத்துராமலிங்கத் தேவர் கதர் பிரச்சாரம், மது ஒழிப்பு பிரச்சாரம் போன்றவற்றில் ஈடுபாடு காட்டி வந்தார்.

1934ஆம் ஆண்டு, ஆங்கில அரசு முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகமுடையார்மீது பழங்குடியினர் குற்றச்சட்டமான (Criminal Tribes Act) குற்றப்பரம்பரைச் சட்டத்தைத் திணித்தது. இதன்படி முக்குலத்தோர் என்போர் குற்றமிழைக்கும் பரம்பரையினராக அறிவிக்கப்பட்டனர். அவர்களது முழுவிபரமும், குடும்பப் பாரம்பரியமும் போன்றவை தொகுக்கப்பட்டு காவல் துறையால் பராமரிக்கப்பட்டு வந்தன. இதனால், ஆண்கள் மட்டுமின்றிப் பெண்கள், குழந்தைகள், முதியோர் கூடத் தீவிர கண்காணிப்புக்குள் ஆளாக்கப்பட்டனர். எங்குக் குற்றம் நடந்தாலும், அதற்கு முக்குலத்தோர்தான் காரணம் எனும் கெடுபிடிநிலை உருவானது. கைவிரல் ரேகை பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர்கள் வெளியூர் சென்றாலும் காவல்துறை அனுமதி பெற வேண்டும். நண்பர்கள், உறவினர்களைச் சந்திப்பது, விழாக்கள் கூட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. முக்குலத்தோர்க்கு எதிரான இந்த இழிநிலையைப் போக்க முத்துராமலிங்கத்தேவர் வெகுண்டு எழுந்து போராடினார்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை விரிவுப்படுத்தி, பேதங்களை உருவாக்கி, முக்குலத்தோரைத் தலைமுறை, தலைமுறையாக அவமானப்படுத்துவதான குற்றப் பரம்பரைச் சட்டத்தை டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு மிக வன்மையாகக் கண்டித்தார். 1935இல் டாக்டர் நாயுடு தலைமையில் அபிராமபுரம் ஆப்பநாடு மறவர் மாநாடு நடைப்பெற்றது. அம்மாநாட்டில் குற்றப்பரம்பரைச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1927 முதல் காங்கிரசில் இணைந்து பணியாற்றி வந்த தேவர், எல்லா மாநாடுகளிலும் கலந்து கொண்டு காங்கிரசின் முடிவுகளைத் தவறாது பின்பற்றி வந்தார். பல தலைவர்களை வரவழைத்து, மதுரை, முகவை மாவட்டங்களில் பேச வைத்தார். தமது பேச்சாலும், எழுத்தாலும் சமூக மக்களுக்கு மட்டுமல்லாது, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நன்மை புரியும் வகையில் நடந்து வந்தார். இதனால், அவரின் செல்வாக்கு காங்கிரசு கட்சியிடையே ஓங்கி வளர்ந்தது.

தென்பகுதியில் நடைபெற்ற ஜில்லாபோர்டு தேர்தல்களில் தமது கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற நின்றார்.

விருதுநகர் முனிசி பாலிட்டி தேர்தலில் காமராசர் அவர்களை வேட்புமனு தாக்கல் செய்திட ஏற்பாடு செய்தார். ஆனால், அத்தேர்தலில் வரி செலுத்தியவர்கள்தான் நிற்கவேண்டும் என்ற விதி இருந்தது. அதற்காக வெள்ளாடுகள் வாங்கிகொடுத்து வரி ரசீதைப் பெற்றுத் தந்தார். காமராசர் வேட்புமனு தாக்கல் செய்திட உதவினார். இதற்கிடையில் வாக்குகள் கேட்கும் நேரத்தில் காமராசர் எதிரிகளால் கடத்தப்பட்டார். ஆனால் தேவர் அவர்கள் உடனே விருது நகரில் ஒரு கூட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்.

“நான் இந்த பொதுக்கூட்டத்தில் பேசி முடித்துவிட்டு கீழே இறங்குவதற்குள் காமராசரை இங்கு ஆஜர்படுத்த வேண்டும். இல்லையேல் பின்விளைவுகள் மோசமானதாக இருக்கும் என்று எச்சரிக்கை செய்தார். கூட்டம் முடிவதற்குள் காமராசர் மேடை முன் வந்து நின்று கைகூப்பினார்.”



வெறும் பீடமாக இருந்த முத்துராமலிங்க தேவர் அவர்கள் நினைவிடத்தை மணிமண்டபம் அமைத்து கொடுத்து போற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

1935ஆம் ஆண்டு கூட்டாட்சிச் சட்டப்படி தேர்தல் நடத்த ஆங்கிலேய அரசு எண்ணியது. அதனால், மாகாணங்களில் சுயாட்சி வழங்கப்படவும், மைய அரசில் இரட்டையாட்சி முறை ஏற்படவும் வாய்ப்பு உண்டாகியது. 1919ஆம் ஆண்டின் இரட்டையாட்சி மாகாணங்களில் வேண்டாம் எனவும்; தேர்தலில் போட்டியிட்டு பதவி பெறவேண்டும் எனவும் தீர்மானித்த காங்கிரசு கட்சி, 1935ஆம் ஆண்டு சட்டப்படி போட்டியிடலாம் எனவும் பதவி பெறலாம் எனவும் தீர்மானித்தது.

ஆனால், காந்தியின் சீடரும், இந்திய விடுதலை போராட்டத்தில் பங்கேற்க தமது ஐ.சி.எஸ். பதவியைத் துறந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு இம்முறையானது மிகுந்த வருத்தம் அளித்தது. இதனால் அவரும், அவரைச் சார்ந்தவர்களும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் காங்கிரசு கட்சியின் தலைவர் பொறுப்புக்கு நேதாஜியே போட்டியிட்டார். அவரை எதிர்த்து காந்தியார் பட்டாபி சீத்தாராமையாவை நிறுத்தினார். சத்திய மூர்த்தி ஐயர், இராஜாஜி போன்றோர் பட்டாபியை ஆதரித்தனர். ஆனால், தேவர் திருமகனார் சுபாஷ் சந்திரபோசுக்கு ஆதரவளித்தார். ஏனெனில், பேசியதை இறுதிவரையில் பற்றுவது என்பன நேதாஜியின் பண்பாடாக இருந்தது. தேவருடன், சீனிவாசய்யங்காரும், இன்னும் பலரும் நேதாஜியை ஆதரித்தனர்.

தேர்தலில் நேதாஜி பெரு வெற்றி பெற்றார். ஆங்கில அரசோ கதிகலங்கி கைபிசைந்து நின்றது. தேவர்மனம் மகிழ்ந்து, நேதாஜி தலைமையில்தான் காங்கிரசு விரைவில் விடுதலையை சாதிக்கும் என்றார்.

எனினும், காந்தியார் மனம் சோர்ந்து பட்டாபியின் தோல்வி என் தோல்வி என்று வெளிப்படையாக அறிவித்தார்.

இந்நிலையில் 1937ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாட்டு பொதுத்தேர்தலில் காங்கிரசு சார்பில் போட்டியிட்ட முத்து ராமலிங்கத் தேவர், எதிர்த்து போட்டியிட்ட இராமநாதபுரம் மன்னர் சேதுபதியைத் தோல்வியுறச் செய்து வெற்றி கண்டார். வடக்கே பொப்பிலி அரசரை தோற்கடித்து வி.வி.கிரி வெற்றி கண்டார்.

இருந்தபோதும் காங்கிரசு கட்சி மீது நேதாஜி போன்ற முத்துராமலிங்கத்தேவர் அதிருப்தி அடையும் நிலை உருவானது. ஏனெனில், தமிழ்நாட்டில் பிரதமராக இருந்த இராஜாஜி குற்றப் பரம்பரைச் சட்டத்தைத் திரும்பப் பெறாமல், காலதாமதம், தயக்கம் காட்டியதெல்லாம் தேவருக்கு மிகுந்த வருத்தமாக அமைந்தன.

இவ்வாறான சூழ்நிலையில், அகில இந்திய அளவில் காங்கிரசு கட்சியின் செயல்பாடுகள் நேதாஜிக்கு அதிருப்தி தந்தன. அதனால், காங்கிரசு கட்சிக்குள்ளேயே அதிருப்தியாளர்களானவர்கள் தீவிரவாத கொள்கையை அடிப்படையாக கொண்டு முன்னேற்ற அணி அல்லது ‘ஃபார்வார்டு பிளாக்’ என்ற குழுவை உருவாக்கினர். பேராசிரியர் என்.ஜி.ரங்கா, கவிஷர், நாரிமன், சேனாதிபதிபாபட் போன்ற தேசியத் தலைவர்கள் வரிசையில் முத்து ராமலிங்கத் தேவரும் அதில் இணைந்தார்.

1939இல் காங்கிரசு கட்சியிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு முழுமையாக ஃபார்வர்டு பிளாக் கட்சியில் சேர்ந்து உழைத்தார். நேதாஜியை தமிழ்நாட்டில் பல இடங்களுக்கு அழைத்து வந்து ஆதரவு திரட்டி பொதுக்கூட்டங்களில் பேச வைத்த பெருமை தேவருக்குண்டு. இதனால் தேவர் மற்றும் அவரைச் சார்ந்தோர் சிறை செல்ல நேரிட்டது. ஆங்கில அரசால் அடிக்கடி கைது செய்யப்பட்டார். துன்பம் தனியே வருவதில்லை. (Misfortune Never comes Alone) என்ற ஆங்கிலம் பழமொழி எவ்வளவு உண்மை என்பது தேவர் வாழ்வில் அடிக்கடி நடந்து வந்தது.

இரண்டாம் உலகப்போர் காலக்கட்டத்தில் பசும்பொன் தேவரும் அவரது தோழர்களும் ஆங்கில அரசை விமர்சித்து வந்தனர். இந்நிலையில் தேவரை மதுரை நகரிலிருந்து வெளியேறக் கூடாது என்று மதுரை மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்போட்டார். ஆனால் தனது சொந்த ஊருக்கு செல்லாமல் இருக்க இயலாது என்று புறப்பட்டபோது இரயில் அடியில் கைது செய்யப்பட்டார். திருச்சி, வேலூர், அலிப்பூர், ராஜமந்திரி, மத்திய மாகாண இராணுவ முகாம் அமைந்த ‘டாமு’ சிறை என மாற்றி 6 ஆண்டுகள் சிறை கண்ட தேவர் 5.9.1945இல் தான் விடுதலையானார்.

அந்நேரத்தில் நேதாஜி சுதந்திர இந்திய அரசை அமைப்போம் என பிரகடனம் செய்தார். அதற்கான இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கினார். ஃபார்வார்டு பிளாக் கட்சி தடைசெய்யப்பட்டது. அதனால் பசும்பொன் தேவர் நீண்டகாலம் அடைக்கப்பட்டார்.

நான் செய்கிற நன்மைகள் எல்லாம் இந்த நாட்டிற்குச்சேரட்டும்; அதனால் வரும் தீமைகள் எதுவாயிருந்தாலும் அவை என்னைச் சேரட்டும்” என்றார் தேவர்.

(Nationality and Divinity are my two eyes.
Do your duty. Don't expect any benefits.)
என்றார்.

1952இல் விடுதலை இந்தியக் குடியரசின் முதல் பொதுத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றம், டெல்லி பாராளுமன்றம் ஆகிய இரண்டு தேர்தலிலும் போட்டியிட்ட அவர் இரண்டிலும் வெற்றி பெற்றார். பின்னர் பாராளுமன்றப் பதவியை விட்டு விலகி, அத்தொகுதியில் எம்.டி. ராமசாமியை நிற்க வைத்து வெற்றிபெறச் செய்தார்.

சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் நடைபெற்ற தேர்தலில் தொகுதிக்கு வாக்கு கேட்டு செல்லாமலேயே வெற்றி பெற்றவர் தேவர் திருமகனார்.

1946இல் ஆட்சிப்பொறுப்பேற்ற முதல்வர் பிரகாசம் தேவர் திருமகனை அழைத்து தொழில்துறை, உள்துறை, அமைச்சர் பொறுப்பேற்க அவரை அன்பாக வலியுறுத்தினார்.

எனக்கு மந்திரிப் பதவியை காட்டிலும் மக்கள் பணியே சிறந்தது என்று மறுப்புத் தெரிவித்தார்.

1955இல் நாக்பூரில் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1955 முதல் 1956களில் பர்மியத் தமிழர்கள், மற்றும் அரசின் அழைப்பை ஏற்றுச் சுற்றுப் பயணம் செய்து, தமிழ், புத்தமதம், இலக்கியங்கள் பற்றி பரப்புரை நிகழ்த்தித் திரும்பினார்.

1957இல் இராஜாஜி காங்கிரசு கட்சியிலிருந்து விலகினார். தேவர் சிறீவில்லிப்புத்தூர் பாராளுமன்றத் தொகுதியில் மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து எவரும் மனுப்போடவில்லை. இதில் பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினர் பொறுப்பை மட்டும் வைத்துக்கொண்டு முதுகுளத்தூர் தொகுதி உறுப்பினர் பதவியை விட்டு விலகி, அதில் தமது நண்பர் சசி வர்ணத்தேவரை நிறுத்தி வெற்றி பெறச் செய்தார்.

அத்தேர்தலில் காங்கிரசு சீர்திருத்தக் கட்சியினர் பெரும்பான்மையினர் வெற்றி பெற்று எதிர்க்கட்சியாக அமர்ந்தது. அதன் தலைவராக வி.கே. ராமசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதுகுளத்தூர் கலவரம் நடந்தபோது, “எந்த ஒரு சமுதாயமாக இருந்தாலும், அமைதியைக் குலைக்க எண்ணி வன்முறையில் ஈடுபட்டால்; அது என் இதயத்தைப் பிளந்து இரத்தத்தைக் குடிப்பதற்கு சமம்” என்று உருக்கமாக முழக்கமிட்ட அவர்; மக்களிடையே ஒற்றுமை பேண நடவடிக்கை எடுத்து வந்தார். தன்னினமான முக்குலத்தோராக இருந்தாலும், வேறு சமுதாயமாகயிருந்தாலும் நீதி தவறாமல் முடிவு கண்டு அனைவரிடத்திலும் அன்பு பேணி வந்தார்.

கலவரத்தில் இரு சமூகத்திற்கிடையில் ஏற்பட்ட மோதலால் 1957 செப்டம்பரில் பரமக்குடி இமானுவேல் எனும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார். அப்போது மதுரை காங்கிரசு சீரமைப்பு மாநாட்டுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பிய பசும்பொன் தேவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

முதலில் சென்னை, பின் புதுக்கோட்டைச் சிறைகளில் அடைக்கப்பட்டார். இமானுவேல் கொலை வழக்கில் முதல் எதிரியாக அவர்மீது வழக்குகள் புனையப்பட்டன. விசாரணையில் மதுரை ஆட்சியர் தந்த சாட்சியம்படி நீதிபதி எம். அனந்த நாராயணன், இமானுவேல் கொலைக்கும், தேவருக்கும் எந்தத் தொடர்புமில்லை எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான தேவரைத் தெய்வத் திருமகன் என்று முக்குலத்தோர் மற்றவர்களும் போற்றி வந்தனர்.

1957ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தேவர் திருமகன் இரண்டு ஆண்டுக்குப்பிறகுதான் முதல் நாடாளுமன்ற உரையை நிகழ்த்த முடிந்தது. 13.2.1959இல் அவர் ஆற்றிய பதினைந்து நிமிட சொற்பொழிவு பற்றி இந்திய எக்ஸ்பிரஸ் ஏடு “Mr. Muthuramalinga Devar. THE LAST SPEAKER OFF THE DAY. Held the Attention of the House Fiery oratory என்று எழுதி பெருமைப்படுத்தியது.

**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



ஆனால், ஒன்றறை ஆண்டுகாலமாக பதவி ஏற்புக்குக்கூட செல்ல முடியவில்லை; தொடர்ச்சியான பயணங்கள், போராட்டங்கள்; அதனால் பல ஆண்டுகள் சிறைகள், என உடல்நலம் குன்றியிருந்தார். எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் 6 மாதத்திற்குள்ளாக பொறுப்பு ஏற்க வேண்டும். இல்லை எனில் பதவியிழப்புக்கு உள்ளாவார். விடுதலை வீரர் தேவரின் பெருமையை உணர்ந்த பிரதமர் நேரு அவர்கள், சட்ட விலக்குத் தீர்மானம் கொண்டு வந்து, தேவரின் தேசபக்திக்கு நன்றி பாராட்டினார்.

1962 பாராளுமன்றத் தேர்தலில் அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இராஜாஜியின் சுதந்திரா கட்சி அவருக்கு ஆதரவு தந்திருந்தது.

காடு, கழனி, பாசன நிலப்பரப்பு 1 இலட்சம் பனைமரங்கள் என 32 1/2 கிராமங்கட்குச் சொந்தமான பெரும் நில உடைமைதாரரான தேவர், விவசாயிகளுக்கு அவலநிலை ஏற்பட்டபோது, அவர்களுக்காக துணைநின்று ‘விவசாயிகள் மாநாடு’ ஒன்றினை இராஜபாளையத்தில் நடத்தினார். அம்மாநாட்டில் நம்பூதிரிபாடு, ஏ.கே. கோபாலன், பி. இராமமூர்த்தி, ஜீவானந்தம், சீனிவாசராவ் போன்ற இடதுசாரித் தலைவர்களை பங்கேற்க வைத்துப் ‘ஜமீன் ஒழிப்பு’ப் போராட்டத்துக்கு வழி வகுத்தார். இதனால், சிறீ பிரகாசர் தலையில் “ஜமின்முறை ஆய்வுக்குழு’ ஒன்றை நிறுவி, அதன் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி வைத்தார். அதனால் விவசாயிகளின் கண்ணீர் துடைக்கப்பட்டது.

தேவர் பெருமகனார் தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். அதே காலத்தில் இயங்கிய 23 தொழிற்சங்கங்களில் தேவர் தான் தலைவராகவும் கம்யூனிஸ்ட்டைச்சேர்ந்த ஜீவா துணைத்தலைவராகவும், செயலாளராகவும் டி.வி. சசிவர்ணம், ராமனாதன் போன்றோர்கள் இருந்து பணியாற்றிவந்தனர். 193839 மதுரை மகாலட்சுமியில் தொழிற்சங்கத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தபோது மிகப் பெரிய போராட்டம் நடத்தியதால், அவர்மீது வன்முறை தூண்டியதாக வழக்கு புனையப்பட்டு (I.P.C. 110) பிரிவுப்படி 6 மாதங்கள் சிறை எனத் தீர்ப்புரை வழங்கி திருச்சி, வேலூர், அமராவதி சிறைகளில் அடைக்கப்பட்டார்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற குறள்படி சாதிக் கொடுமைகளைச் சாடி வந்தார். முருகன் பக்தரான அவர் குறவர் குல வள்ளியை முருகன் மணந்தது ஏன்? என்று கடவுளை அடையாளங்காட்டினார்.

“நான் குழந்தையாக பிறந்து 6 மாதத்தில் அன்னை தவறிய நிலையில் ஒரு முஸ்லீம் அன்னை தான் எனக்கு பால் புகட்டினார்; எனக்கு கிறித்துவ ஆசிரியர்கள் தான் கல்வியைத் தந்தார்கள். என் பெற்றோர்கள் இந்துக்கள்” இதில் எங்கே சாதி இருக்கிறது. நான் தேர்தலில் நின்றபோது, என் இனத்தைச் சேர்ந்தவர்கள் 18,000 பேர்தான். ஆனால் நான் வாங்கிய வாக்குகள் இதர சமுதாயம், நாத்திகர்கள் எல்லாம் 2 லட்சத்திற்கு மேல் வழங்கியவை ஆகும்.” என்று மதுரை தமுக்கம் மைதானப் பொதுக்கூட்டத்தில் (1411962) பேசி வெளிப்படுத்தினார்.

மதுரை ஆலய பிரவேசம் நடத்திட காங்கிரசு இயக்கத் தலைவர் வைத்திய நாதய்யர் நேரில் வந்து, தேவரிடம் அழைப்பு விடுத்தார். அதற்கு ஆதரவு தெரிவித்த தேவர், தான் மீனாட்சி நூற்பாலை போராட்டத்தில் உள்ளேன். அதே நேரத்தில் ஆலயப் பிரவேசத்தினை யாரும் தடுத்தால் விரைவில் ஆயிரக்கணக்கான இந்துக்களோடு தாழ்த்தப்பட்ட மக்களையும் படையாக மாற்றி அனைத்து இந்துக்கோயில்களிலும் ஆலயப் பிரவேசம் செய்வேன்” என்று அறிவிப்பு செய்தார். அத்துடன் பலரை அனுப்பி, கோயில் வளாகச் சுற்றுச்சுவர் உட்பகுதியில் வரிசையாக நிற்க வைத்து ஆலய பிரவேசத்துக்கு உதவி செய்தார். அந்த வெற்றியைக் கண்டு மதுரை ஆட்சியர் தேவரை ‘மாமனிதர்’ எனப் போற்றினார்.

சாதியில் உயர்ச்சி, தாழ்ச்சியில்லை; இரண்டு கரங்களைச் சேர்த்துக் குவித்தால்தான் தெய்வத்தை வணங்க முடியும் என்று மனித நேயம் பேசியவர் தேவர். தமிழகத்தின் எந்தப் பகுதிக்கும் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது தங்க நேரிடும்போதும் சாப்பிட நேரிடும்போதும், முக்குலத்தோர் வீட்டின் ஏற்பாடுகள் ஏற்க மாட்டார் அதற்கு மாறாக, செட்டியார், பிள்ளையாதவர், நாயுடு, தாழ்த்தப்பட்டோர் என மற்ற சமுதாயத்தினர் வீட்டில்தான் சாப்பிட விரும்புவார். இப்படியான வரலாற்றுக்குச் சொந்தக்காரரான பசும்பொன்தேவர், ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனக்குச் சொந்தமான நிலங்களை இனாமாக தானம் செய்தார்.

அரிசன மக்கள் வேறு யாருமல்ல. அவர்களும் என் அன்புச் சகோதரர்கள். அவர்களைத் தாக்க நினைத்தால், முதலில் என்னை அழித்துவிட்டு பின்பு அவர்களிடம் செல்லுங்கள்’ என்று அறிவுறுத்தினார்.

சாதி என்பது பச்சை அநாகரிகம்; சாதியையும், நிறத்தையும் பார்ப்பவன் அரசியலுக்கு லாயக்கில்லை; சாதி பார்ப்பவன் தெய்வத்தை வணங்குவதில் பொருளே இல்லை; அரண் மகன் குமரனையும், குறமகள் வள்ளியையும் தம்பதிகளாகக் காட்டுகிறது நமது புராணம்” என்று பேதமை நீங்கிப் புத்தி புகட்டினார். அருந்ததிய வகுப்பைச் சேர்ந்த டி. மொக்கையன் 1962ஆம் ஆண்டு ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் நிற்கவைத்து வெற்றிபெற வைத்தப் பெருமை தேவர் பெருமகனாரைச் சாரும்.

பதவியை ஒரு சேவையாகக் கருத வேண்டும் என்றவர். சட்டமன்றத்தில் 1955-56 ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின்போது (3.3.1955) பேசிய தேவர் அவர்கள், ‘தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்குங்கள்’ என்று கண்டிப்புக் காட்டிப் பேசினார்.

ஆயிரக்கணக்கான மக்கள்கூடும் அவையில் எவ்விதக் குறிப்புமில்லாமல், கடல் மடை திறந்தாற்போல பேசும் எப்பொருள் பற்றியும் ஆற்றல் பெற்றவர். மேடையிலும் தனிப்பட்ட முறையிலும் கொச்சைத் தமிழில் பேசமாட்டார். அவர் அழகிய இலக்கணத் தமிழில்தான் பேசுவார். ஒரு சமயம் காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் இந்து சமயம் பற்றி ஆங்கிலத்தில் மூன்று மணி நேரம் பேசி அனைவரையும் அசத்தினார். கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய பல்கலைக் கழகத் துணை வேந்தர் சர்.சி.பி. ராமசாமி ஐயர் வியப்புற்று “உலகின் பெரும் பகுதியை ஆங்கில மொழி ஆளுகிறது. உலகாளும் அம்மொழியை எங்கள் தமிழ் நாட்டு பசும்பொன் தமிழ்ச்சிங்கம் ஆள்கிறது” என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

தேசத்திற்காக எழுதுகிறேன்; பேசுகிறேன் வெள்ளையர் அரசை வேரறுக்க வேண்டும் திபத்திலிருந்து வரும் அகதிகளிடத்தில் காட்டுகின்ற அக்கறையை ஏன் ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களிடம் காட்டவில்லை என்று போர்க்குரல் எழுப்பினார்.

நான் வன்முறையை விரும்பாதவன். வாய்ப்பூட்டுச் சட்டம் எதற்கு? என்று பல வினாக்கள் எழுப்பினார். வடபுலத்திலே திலகர் அவர்களுக்கும் தென் பகுதியிலே தேவர் அவர்களுக்கும் தான் வாய்ப்பூட்டு சட்டம் போடப்பட்டது.

உலகப்போகம், பொருள், புகழ் இவையனைத்தையும் விட்டொழித்தவராய் பற்றற்ற வாழ்வைப் பெரிதும் விரும்பிய பண்பாளர் தேவர்.

அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அரசின் எவ்வித சலுகைகளோ, சம்பளமோ, விமான, இரயில் பயண அரசு செலவுகளையோ ஏற்றுக்கொண்டதில்லை.

தேவர் தனது இறுதிக்காலத்தில் மதுரை திருப்பரங்குன்றத்தில் தங்கி உடல் நலிவுற்ற நிலையில் இருந்து வந்தார். அவர் ஆங்கில மருந்துகளையோ அறுவை சிகிச்சையோ விரும்பாதவர். சித்த வைத்தியம் மேல் அவர் பற்று கொண்டு சிகிச்சை பெற்று வந்தார்.

வெப்பு நோய் பாதிப்பால் உடல் நலிவுற்றிருந்த தேவர் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 30இல் தனது 55 ஆவது வயதில் காலமானார்.

“அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒரு மித்த இன்றைய மிகப்பெருந்தலைவர் மறைந்து போனார்” என்று அறிஞர் அண்ணா தமது இரங்கல் அஞ்சலியில் புகழாரம் சூட்டினார்.

“தேசியம் காக்கும் செம்மல், சேது வேங்கை, பிற வசன கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், மனிதருள் முருகன், தென்னாட்டுத் திலகர், தென்னாட்டு விவேகானந்தர், தென்னாட்டு போஸ், காங்கிரசு காத்தான் எனப் பலவாறாக சிறப்புப் பட்டங்கள் தேவர் திருமகனார்க்கு அளிக்கப்பட்டன.

தேவர் திருமகனார் அடிக்கடி அவர் பேசிவரும் கூட்டங்களில் தனக்கே உரிய மரபுத்தொடர்களை பயன்படுத்துவார். அவை யாவும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அன்று தேவர் சொன்னதை தி.மு.கழக ஆட்சியில் முதல்வராக இருந்த கலைஞர் செய்து சாதனைகளாக்கினார்.

ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இலவசமாக கலைஞர் அரசு வழங்கியது.

1954, மார்ச் 24 சட்டசபையில் தேவர் சொன்ன அந்த கருத்து, ‘வீணாகக் கிடக்கும் பெரும்பாலான நிலங்களை பெரும் பணக்காரர்களுக்கு மீண்டும் மீண்டும் கொடுக்க வேண்டும் என்ற பழக்கத்தை நிறுத்தி, ஏழைகளுக்கு ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என விவாசயத்திற்கு லாயக்காய் புதிதாக நிலம் வழங்கப்படுமானால் அவர்கள் யாரையும் எதிர்பாராமல் முயற்சி செய்து வாழ வசதி ஏற்பட்டது.

தி.மு.க. தலைவராக இருந்த கலைஞர் அவர்கள், அண்ணாவிற்குப் பிறகு அரியாசனம் ஏறினார். அவர் முதல்வரானதும் தேவர் சமாதியில் நினைவாலயம் கட்ட உதவி புரிந்தார். கலைஞர் ஏற்பாட்டில் மதுரை கோரிப்பாளையத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவில் ஆசியாவில் மிக உயரமான சிலை தேவர்க்கு எழுப்பி, அதனை இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களால் (5.1.1974) திறந்து வைக்கப்பட்டது. கழக ஆட்சியில் நெல்லை மாவட்டம் மேலைநீலித நல்லூர், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஆகிய இடங்களில் தேவர் பேரால் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. உசிலம்பட்டி கல்லூரி முதல்வராக இருந்த பேரறிஞர் அண்ணாவால் தொடங்கி வைக்கப்பட்டது. 1973 முதல் கலைஞர் முக்குலத்தோர் இன மக்களுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மேன்மைபெற உதவினார். சீர் மரபினர் என்பவர்களாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்தார். மேலும் தற்போது முதல்வர் தளபதி அவர்கள் முக்குலத்தோர் சமுதாயத்திற்காக கல்வி வேலைவாய்ப்பு பெறுவதற்கான பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர் பெருமக்களாக வாய்ப்பு தந்து உதவியுள்ளது தி.மு.க. அதுமட்டுமல்லாது கழகத்திலும் முக்குலத்தோர் சமுதாய மக்களுக்கு பல்வேறு பொறுப்புகள் தந்து சிறப்பித்து வருகிறார்.

ஆகவே தேவர் பெருமகனார் சுத்தத் தியாகியாகவும் தேசியத் தலைவராகவும் அறம் வளர்த்தவராகவும், போர்க்குண உருவம் படைத்தவராகவும், சாதி, சமய வேறுபாடுகள் அற்றவராகவும், பண்பும், பாசமும், அடக்கமும் கொண்ட பெருந்தலைவராகவும் விடுதலைப் போராட்ட தேச பக்தராகவும், சுத்த பிரம்மச்சாரியாகவும், ஒழுக்கம் வளர்க்கும் பேச்சு ஞானியாகவும்,சிறந்த மனிதாபிமானியாகவும், சமதர்ம சிற்பியாகவும் நமக்கெல்லாம் அடையாளமாக இருந்தவர்தான் பசும்பொன் தேவர் அவர்கள்.

தேவர் திருமகனார் புகழ் ஓங்குக!


நாள் : 30.10.2023 திங்கட்கிழமை
இடம் : இராமநாதபுரம் மாவட்டம்.
பசும்பொன் முத்துராமலிங்கதேவர் நினைவிட முகப்பில் பொதுமக்கள் பாதுகாப்பாக மரியாதை செலுத்தும் வகையில் ரூ.1,42,80,000 மதிப்பீட்டில் ஒரு மண்டபமும், மிக முக்கிய பிரமுகர்கள் மரியாதை செலுத்தும் பாதையில் ரூ.12,54,000 மதிப்பீட்டில் மற்றொரு மண்டபமும் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு
நன்றி..! நன்றி..!! நன்றி...!
தேவர் பெருமகனார் குரு பூஜைக்குப் பசும்பொன் வருகை தரும்
தமிழகத்தின் தங்கம்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
என்றும் உங்கள் வழியில்
அக்ரி K.P.T.கணேசன்
கழகத் தீர்மானக்குழுச் செயலாளர்


30 அக்டோபர் 2023
நன்றி! நன்றி!! நன்றி!!!
போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் அறிவித்த
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும்
கழக முதன்மை செயலாளர்
நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்
மாண்புமிகு கே.என்.நேரு அவர்களுக்கும்
போக்குவரத்து துறை அமைச்சர்
மாண்புமிகு சா.சி.சிவசங்கர் B.E., M.B.A., அவர்களுக்கும்
பேரவை பொதுச் செயலாளர்
மரியாதைக்குரிய மு.சண்முகம் MP அவர்களுக்கும்
பேரவை பொருளாளர்
மதிப்புமிகு கி.நடராசன் அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
T.சேகர் தலைவர்
P.குணசேகரன் பொதுச்செயலாளர்
S.அப்பாவு பொருளாளர்
A.கனகசபை அலுவலகச் செயலாளர்
மற்றும் அனைத்து நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
(பதிவு எண் : 609 /TRY பேரவை இணைப்பு எண் :475)
திருச்சி, கரூர் மண்டலம்


அக்டோபர் - 30
பசும்பொன் தேவர் திருமகனார்
குருபூஜை விழாவிற்கு வருகை தரும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கும்...
R.S.ராஜகண்ணப்பன் B.Sc., BL.,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரியத்துறை அமைச்சர் கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் B.A., MLA
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
Vettri Arts 98402 06731
அன்புடன் ஏ.சி.ஜீவானந்தம் இராமநாதபுரம் மாவட்டம்

# திராவிட மாடல் அரசு 41

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## முறைசெய்து காப்பாற்றும் சமாதானம்!

மக்களாட்சிக் கட்டமைப்பில், ஒரு மாநிலத்துக்குத் தேவைப்படுகின்ற நிதி ஆதாரங்களில் ஒன்று, வரி. சமுதாயத்திலிருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தில் வணிக வரி, விற்பனை வரி உள்ளிட்ட வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்கின்றன.

தொழில் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடும் வணிகர்கள், அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை முறையாக செலுத்தினால்தான் அரசு இயந்திரம் தொய்வின்றிச் சுழலும். வரி வருவாய் சீராக இருந்தால்தான் மக்கள் நலத் திட்டங்கள் உட்பட, பல வளர்ச்சிப் பணிகளை, அரசால் எந்தவிதச் சிரமும் இல்லாமல் மேற்கொள்ள முடியும்.

ஆனால், பல்வேறு காரணங்களால் தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக, 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் தொடர்புடைய வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிக வரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ கொண்டுவந்துள்ளதுதான், **‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’.**

### புதிய அணுகுமுறை... கூடுதல் சலுகை...

தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம் உள்ளிட்ட மேலும் பத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. இந்தச் சட்டங்களை எல்லாம் உள்ளடக்கி, 2017-ஆம் ஆண்டுஜூலை 1 அன்று நாடு முழுவதும் ஜி.எஸ்.டி. சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச் சட்டங்களின் கீழ், மாநில அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன. இந்த நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்பது வணிகர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். அதைப் பரிசீலித்த நமது முதலமைச்சர், பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில், வணிகர்களுக்கும் வணிக வரித் துறைக்கும் இடையில் ஒரு சமாதானத்தைக் கொண்டு வர அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது தான் **‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’.**

கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகை வசூலிப்பு தொடர்பாகப் பல சமாதான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்தாலும், **‘திராவிட மாடல் அரசு’** ஆட்சியில், புதிய அணுகுமுறையில், கூடுதல் சலுகைகளுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### தமிழ்நாடு வரலாற்றில் முதல்முறை...

இந்தத் திட்டத்தின் கீழ் வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் ஐந்து பிரிவினராகப் பிரிக்கப்படுகிறார்கள். முதலாவதாக, ஒரு வரிவிதிப்பு ஆண்டில் ரூபாய் 50 ஆயிரத்துக்குக் குறைவான வரி, வட்டி, அபராத தொகை செலுத்த வேண்டியவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு வணிகம் செய்யும் எளிய வணிகர்களாகவே இருப்பார்கள். இவர்களின் நிலுவைத் தொகை முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்.

இதில் உள்ள சிறப்பம்சம், ரூபாய் 50 ஆயிரம் என்ற உச்சவரம்பானது, ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டுக்கும் பொருந்தும். அதாவது ஒரு எளிய வணிகருக்கு அவர் செலுத்த வேண்டிய நிலுவை ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டுக்கும் தனித்தனியாக ரூபாய் 50 ஆயிரத்துக்கு உட்பட்டிருந்தால், அது முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும். இது போன்றதொரு சலுகை வழங்குவது தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும்.

இதன் கீழ் சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரத்து 400 இனங்கள் தொடர்புடைய ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்கள் பயன்பெறுவார்கள். மொத்தம் ரூபாய் 147 கோடி நிலுவை முற்றிலுமாக இந்த வணிகர்களின் பொருட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது.

### பயனடையும் பெருவணிகர்கள்

வரி நிலுவை செலுத்த வேண்டிய எஞ்சிய வணிகர்கள், ரூபாய் 50 ஆயிரம் முதல் 10 இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் 10 இலட்சம் முதல் 1 கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் 1 கோடி முதல் 10 கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள் மற்றும் ரூபாய் 10 கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின் கீழ் கொண்டு வரப்படுவர். (அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் பார்க்க பெட்டிச் செய்தி)

இந்தத் திட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் வைக்கப்பட வேண்டிய திரண்ட வட்டித் தொகையும் (ACCRUED INTEREST) முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும். மேலும், ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காகப் பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாகத் திரும்ப ஒப்படைக்கப்படும். இதன் மூலம் 47 ஆயிரம் வணிகர்கள் சிறப்புச் சலுகைகள் பெற்று வரி நிலுவைச் சுமையில் இருந்து வெளிவர இருக்கிறார்கள். இந்தத் திட்டம் 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 16 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. நான்கு மாத காலம் அதாவது 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும்.

யாருக்கும் தோல்வி இல்லாத வெற்றியின் இன்னொரு பெயர்தான் சமாதானம். இந்தத் திட்டம் மூலம் வணிகர்கள் வளம் பெறட்டும். வணிகம் வளரட்டும்!

**...சாதனை தொடரும்**

#### முதல் வரம்பினர்

**சலுகைகள் :** வரி, வட்டி, அபராத நிலுவையின் மொத்தத் தொகையில் 20 சதவிகிதத்தை ஒரே மட்டத் தொகையாக (FLAT RATE) அரசுக்குச் செலுத்தலாம் (அல்லது) ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரியை ஏற்றுக் கொண்டவர்கள், வரி நிலுவையில் 66 சதவிகிதம், அபராதத்தில் 10 சதவிகிதம், வட்டியில் 10 சதவிகிதம் என அரசுக்குச் செலுத்தலாம்.

**வழக்கு தொடுத்திருந்தால் :** நிலுவை வரியில் 33 சதவிகிதத்தையும், அபராதத்தில் 10 சதவிகி தத்தையும், வட்டியில் 10 சதவிகிதத்தையும் அரசுக்குச் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை ஆனால், வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 10 சதவிகிதத்தையும், வட்டியில் 10 சதவிகிதத்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** சுமார் 38,200 பேர்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 1,400 கோடி ரூபாய்.

#### இரண்டாவது வரம்பினர்

**சலுகைகள் :** மேலே சொல்லப்பட்ட சதவிகிதங்கள் பொருந்தும். ஆனால், ஒரே மட்டத் தொகை செலுத்தும் முறை கிடையாது.

**பயனடைவோர் :** சுமார் 7,265 பேர்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 3,495 கோடி ரூபாய்.

#### மூன்றாவது வரம்பினர்

**சலுகைகள் :** வரி விதிப்பை ஏற்றுக்கொண்டவர்கள் வரி நிலுவைத் தொகையில் 75 சதவிகிதத்தையும், அபராத நிலுவைத் தொகையில் 15 சதவிகிதத்தையும் மற்றும் வட்டி நிலுவைத் தொகையில் 20 சதவிகி தத்தையும் செலுத்தலாம்.

**வழக்கு தொடர்ந்திருந்தால்:** வரி நிலுவையில் 50 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகி தத்தையும், வட்டித் தொகையில் 20 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை, ஆனால், வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 20 சதவிகிதத்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** சுமார் 1,454 பேர்.

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 6,800 கோடி ரூபாய்.

#### நான்காவது வரம்பினர்

**சலுகைகள் :** வரி விதிப்பை ஏற்றுக்கொண்டிருப்ப வர்கள் வரி நிலுவையில் 90 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டி நிலுவையில் 30 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.


**வழக்கு தொடர்ந்திருந்தால் :** வரி நிலுவையில் 60 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 30 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை, ஆனால் வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 30 சதவிகித்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** 185 வணிகர்கள்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 13,100 கோடி ரூபாய்.

## ஆங்கிலத்தில் ஆரியமாயை!




தமிழ்நாட்டின் சிந்தனை வளர்ச்சியைச் செதுக்கியவை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் கருத்துகள்தான் என்றால் மிகையில்லை. அரசியல் வீரியம்மிக்க அந்த எழுத்துகளைப் பிறமொழிகளுக்கும் கொண்டு செல்ல வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. குறிப்பாக, ஆரியம் - திராவிடம் கருத்து மோதல்கள் உச்சம் பெற்றுள்ள இந்த நாட்களில், பேரறிஞர் அண்ணாவின் ‘ஆரியமாயை’ நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது DRAVIDIAN STOCK பதிப்பகம்.

“பேரறிஞர் அண்ணாவின் சொல்வளம் மிக்க மொழிநடையை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பது மிகச் சவாலானது” என்கிறார் இதனை மொழியாக்கம் செய்துள்ள நெய்வேலி அசோக். “அண்ணாவையும் பெரியாரையும் இந்தியா முழுக்க வாசித்தால், கண்டிப்பாக மாற்றம் ஏற்படும் என்பது என் நம்பிக்கை. தமிழர் அல்லாதோரிடம் பெரியாரையும், அண்ணாவையும், கலைஞரையும் கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது. அதற்காகத்தான் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளோம். ஆங்கிலமுறை கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்கும் இது பயன்படும். எனது நான்கு வருட ஆசை நிறைவேறியுள்ளது” என்கிறார் பதிப்பாளர் கௌதம். நூல் விலை ரூ.130

நூல் தேவைக்கு 90927-87854 என்கிற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.
**பேரறிஞர் அண்ணாவின் தீ பரவட்டும்!**

## :ப்ளாஷ்பேக்



### கழகக் ‘கோட்டை!’

என் தாத்தா கோட்டை சாமி அவர்கள் பேரறிஞர் அண்ணா காலம் முதலே கழகத்தில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றி வந்தவர். பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளராகவும் சில காலம் செயல்பட்டார். 1993-ஆம் ஆண்டு ஜனவரி 22 அன்று திண்டுக்கல் மாவட்டத்துக்கு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞரிடம் மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூ.10 இலட்சம் தேர்தல் நிதியாக வழங்கப்பட்டது. உடன் இன்றைய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களும் இடம்பெற்றிருக்கிறார். காலம் காலமாகக் கழக உணர்வு இன்றைக்கும் தொடர்கிறது.



நிஜான்தன்

**-பி.கே.நிஜான்தன், நிலக்கோட்டை, திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழ் மக்களின் கடமை!

**1943-ஆம் ஆண்டு, ஏப்ரல் 1-ஆம் தேதி, ‘திராவிட நாடு’ இதழுக்கு உதவி புரியும்படி தந்தை பெரியார் கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் 18-ஆம் தேதி ‘திராவிட நாடு’ இதழிலும், 28-ஆம் தேதி ‘விடுதலை’ இதழிலும் பிரசுரிக்கப்பட்டது. சுயமரியாதைக் கருத்துகள் நாட்டில் பரவ வேண்டும் என்கிற வேட்கை கொண்டிருந்த பெரியார், பத்திரிகைகள் வளர்வதிலும் பெரும் விருப்பம் காட்டினார். ‘குடி அரசு’, ‘திராவிட நாடு’ இரண்டையும் ஆதரிக்க வேண்டியது தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கடமையான தொண்டு ஆகும்’ எனக் கூறியிருந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 285




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131